# போர்வாள்

ாள் 4] 7-10-50 [வீச்சு 6




"பத்து ஆண்டுகளுக்குள் அனைவரையும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆக்கிவிடுவது சர்க்கார் கடமை என்று அரசியல் திட்டம் தெரிவிக்கிறது. ஆனால் அந்தப்படி செய்வது நடைமுறையில் நடவாத காரியம் என்பதை" நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

**மந்திரி மாதவமேனன் சொற்பொழிவு**

சிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அண

Best copy available.

# சிவகங்கைப் பாசறையில் திரண்டனர் திராவிடர்!

—— × ——

## குமுறும் எரிமலைகள் கூடிய காட்சி

—— × ——

## மக்கட் கடலிடையே மாவீரர் அண்ணாதுரை

### கழக வீரர்கள்தம் போர்ப்பரணி.

செப்டம்பர் 30, அக்டோபர் 1 ஆகிய இரண்டு நாட்களிலும், சிவகங்கை, சிவகங்கையாக இல்லை. வீரத் திராவிடர்தம் வெற்றிப் பாசறையாக விளங்கியது. நகரத்தின் நாலுபக்கங்களிலும் திராவிடப் போர்முரசு திண்திண் என ஒலித்தபடி இருந்தது. எங்கு நோக்கினும், வீரப் பார்வையும் சிங்க ஏறுகள் போன்ற தோற்றமும் அஞ்சா நெஞ்சமும் வெஞ்சமர்க்கஞ்சாப் பண்பும் படைத்த செந்தமிழ்க் காளைகள் நடமாடும் எரிமலைகள் என வீர உலா வந்து கொண்டிருந்தனர். வடநாட்டுச் சிறையிலே சிக்குண்டு சித்திரவதைக் குள்ளாகிவரும் திராவிட நல்திருநாட்டைச் சிறையிலிருந்து விடுவித்துப் பரந்த உலகத்துக்கு அழைத்து வருவதற்கான அரும்பெரும் போராட்டத்தில் குதிப்பதற்கான பண்பும் பயிற்சியும் ஆர்வமும் ஆற்றலும் படைத்த அறப்போர் வீரர்களே சிவகங்கையில் திரண்டிருந்த அந்த ஆயிரமாயிரவரும்.

செப்டம்பர் 29 மாலையிலிருந்தே, வந்துகொண்டிருந்த ஒவ்வொரு புகைவண்டியிலிருந்தும், பஸ்ஸிலிருந்தும், தமிழகத்தின் நாலுபகுதிகளிலிருந்தும், திராவிடத் தீரர்கள், சிவகங்கை நகரில் வந்து குதித்தபடி இருந்தனர். அன்று இரவே, சிவகங்கை, திராவிடர் கோட்டமாக மாறிவிட்டது. பொழுது புலர்ந்ததும், மக்கள் கூட்டம் மேலும் மேலும் பெருகி, நண்பகல், மாநாட்டுப் பந்தலில், வெள்ளம் போல் திரண்டு காட்சி அளித்தது.

பந்தல், மிகப் பெரிய அளவில், எழில்மிகு முறையில், கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில், நன்கு அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் ஒரு கோடியில், மேடை, உயரமாகவும் அகலமாகவும் அமைக்கப்பட்டிருந்தது.

மேடைமீது, பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, குடந்தை நீலமேகம், சேலம் சித்தையன், கோவில்பட்டி நகராட்சித் தலைவர் வள்ளிமுத்து, ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன், மதுரை எஸ். முத்து, காஞ்சி கல்யாண சுந்தரம், பொன்மலை பராங்குசம், அதிராம் பட்டணம் என். எஸ். இளங்கோ, தூத்துக்குடி சிவசாமி, தங்கப்பழம், ஈரோடு அப்பாவு, குடந்தை எஸ். கே. சாமி, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், மா. இளஞ்செழியன், தில்லை வில்லாளன், மு. கருணாநிதி, இராம அரங்கண்ணல், காஞ்சி மணிமொழியார், ஏ. கே. வேலன், சென்னை பி. வீரராகவன், இராஜன், சேஷாசலம், கடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, இசைச் செல்வன் நாகூர் ஹனிபா, அருப்புக் கோட்டை எம். எஸ். இராமசாமி. வை. சு. மஞ்சுளாபாய் அம்மையார், அலர்மேலு அப்பாதுரை அம்மையார், ஈழத்தடிகள் ஆகியோரும் மற்றும் பல முக்கியஸ்தர்களும், வீற்றிருந்தனர்.

மாநாடு, சரியாக 4 மணிக்குத் துவக்கமாயிற்று. மாநாடு தொடங்கப்படுகிறபோது, பந்தல் முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்து, பந்தலைச் சுற்றிலும் பெருங்கூட்டம் கூடிவிட்டது. அந்த நேரத்தில், மக்கட் கடலிடையே மிதக்கும் மரக்கலமென விளங்கிற்று பந்தல். மக்களின் தொகை 50,000க்கு மேலும் பெருகிவிட்டது அதுபோது.

சுயமரியாதை இயக்கத்தின் சிங்க ஏறுபோல விளங்கி, அரும் பெரும் பணியாற்றிய அந்த நாள் வீரர் இராமச்சந்திரனாரின் பெயர் மாநாட்டுப் பந்தலுக்குச் சூட்டப்பட்டிருந்தது.

நாகூர் ஹனியா சிறிது நேரம் தமிழ் இசை முழக்கம் புரிந்தபிறகு, திராவிட நாட்டுப் பண் பாடப்பட்டது.

முதலில், வரவேற்புக் குழுவின் தலைவர், பிரபல வழக்கறிஞர், சிவகங்கை **தோழர் இராஜ சேகரன் B.A. B.L. அவர்கள்**, அரியதோர் உரையாற்றி, மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார்.

பிறகு, உடுமலை நகராட்சிக் கழகத் தலைவர் **தோழர் எம். எஸ். கனகராசன்**, திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசி, மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் இராச சேகரனும், தோழர்கள் அருப்புக் கோட்டை எம். எஸ் இராமசாமி, குடந்தை எஸ். கே. சாமி, மு. கருணாநிதி, சேலம் சித்தையன், சென்னை "போர்வாள்" ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், கும்பகோணம் கே.கே. நீலமேகம், காஞ்சி கல்யாண சுந்தரம், வை. சு. மஞ்சளாபாய் அம்மையார் ஆகியோரும், பாட்டாளிகள் உலகத்துப் படைவீரர்—திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழுச் செயலாளர்—"திராவிடன்" இதழாசிரியர் **தோழர் என். வி. நடராசன்** அவர்களின் சலியாத உழைப்பையும், ஓயாத தொண்டையும், கட்சிப் பற்றையும், கருத்துள்ள பணியையும் மிகவும் பாராட்டி.

(9-ம் பக்கம் பார்க்க)

சந்தா
உள்நாடு
ஓராண்டு: ரூ. 6—8—0
6-மாதம்: ரூ. 3—4—0
தனி இதழ்: 0—2—0

போர்வாள்
[ திராவிடர் வார வெளியீடு ]

சந்தா
வெளிநாடு
ஓராண்டு: ரூ. 8—0—0
6-மாதம்: ரூ. 4—0—0
தனி இதழ்: 0—2—6

வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 புரட்டாசி 20
7—10—50 சனிக்கிழமை | வீச்சு 6

# கோபால்ரெட்டிக்கு ஆறுமாதம் சிறை?

நீதிமன்றம் கூடுகிறது. மூன்று நீதிபதிகள் தங்கள் தங்கள் இடங்களில் அமருகின்றனர். முதல் வழக்காக, சென்னை சர்க்காரின் நிதி அமைச்சர் கோபால் ரெட்டியார்மீது, சென்னை சர்க்காரால் தொடரப்பட்டுள்ள 'வகுப்புத் துவேஷ' வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அட்வொகேட் ஜெனரல், சர்க்கார் சார்பில் வாதிட வந்திருக்கிருர்.

நிதி அமைச்சர், வழக்கறிஞர் துணையின்றித் தானே வாதிடத் தீர்மானித்துள்ளார்.

கோர்ட்ஜவான்:— கோபால் ரெட்டியார்! கோபால் ரெட்டியார்!

கோபால்ரெட்டியார்:—(நீதிமன்றத்துக்குள் நுழைந்து, நீதிபதிகளைப் பார்த்து வணக்கம் செலுத்துகிருர்.)

நீதிபதிகளின் ஆணைப்படி, ஜவான் கேட்டுக்கொள்ள, குற்றவாளி கூண்டில் கோபால் ரெட்டியார் ஏறி நிற்கிருர்.

கோர்ட் குமஸ்தா:— (கோபால் ரெட்டியாரைப் பார்த்து) 'சத்தியமாக நான் சொல்வதெல்லாம் நிஜம் என்று' சொல்லுங்கள்.

ரெட்டியார்:—சத்தியமாக நான் சொல்வதெல்லாம் உண்மை.

அட்வொகேட் ஜெனரல்:—மைலார்ட்! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறவர் சென்னை சர்க்காரில் நிதி அமைச்சராக இருப்பவர். இந்தியக் குடிமக்களுக்கிடையில் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் துவேஷப் பிரசாரம் செய்திருக்கிருர். (அதன் முழுவிவரம் ஏற்கனவே நீதிமன்றத்தில் எழுத்துமூலம் தரப்பட்டு இருக்கிறது) அவர் செய்த துவேஷப் பிரசாரம் இந்தியன் பெனல்கோட் 153 செக்ஷன்படி குற்றமானதாகும்.

பிரதமநீதிபதி:—(இடைமறித்து) நீங்கள் குற்றப்பட்டியலில் குறித்துள்ள ஆட்சேபனைக்குரிய விஷயங்களை எல்லாம் குற்றவாளி பேசி இருக்கிருரா என்பதை, இங்கு நீங்கள் மெய்ப்பித்தாகவேண்டும்.

அட்வொகேட் ஜெனரல்:—எஸ்! மைலார்ட்! (குற்றவாளியைப் பார்த்து) நீங்கள் 29—10—50ந் தேதியில், ஏதாவது பொதுக்கூட்டத்திலோ, மாநாட்டிலோ கலந்து கொண்டு பிரசங்கம் செய்திருக்கிறீர்களா?

கோபால் ரெட்டியார்:— ஆம். நீங்கள் குறிப்பிடும் தேதியில், மதுரை நகரில் நடைபெற்ற சமுதாய ஊழியர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசி இருக்கிறேன்.

அட். ஜெல்:—அம் மாநாட்டில், உங்களுடன் கலந்துகொண்டு பிரசங்கம் செய்தவர்களில் முக்கியஸ்தர்கள் வேறு யாராவது உண்டா?

கோ:—உண்டு. சென்னை சர்க்காரின் முதல் அமைச்சர் குமாரசாமி இராஜாவும், கவர்னரின் மனைவியார் பவநகர் மகாராணியும் குறிப்பிடத்தகுந்தவர்களாவர்.

அட். ஜெல்:— தாங்கள் பேசி வரும்பொழுது, அவர்கள் இருவரில் ஒருவரும் குறுக்கிடவில்லையா?

இரண்டாம் நீதிபதி:—அவசியமற்ற கேள்வி. இதை அனுமதிக்க முடியாது.

அட். ஜெல்:—உங்கள் பேச்சை, அங்குக் கூடியிருந்த ஜனங்கள் எப்படி வரவேற்ருர்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்களா?

3-ம் நீதிபதி:—கேள்வி விளக்கமாக இல்லை. பிரஸ்தாப வழக்குக்கும் இக்கேள்விக்கும் சம்பந்தம் துளியும் கிடையாது.

அட். ஜெல்:—நிறைய சம்பந்தம் இருக்கிறது. இவருடைய பிரசங்கத்தினுல் மக்கள் பெற்ற மாற்றத்தைத் தெரிந்துகொள்வது மிக மிக முக்கியமாகும். அப்பொழுது தான் இவருடைய பிரசங்கத்தின் விளைவையும், அதனுல் குற்றத்தின் தன்மையையும் நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

பிரதம நீதிபதி :—ஆம்! ஆம்! அதே கேள்வியை மறுபடியும் கேளும்.

அட். ஜெல் :—தங்கள் பேச்சைக் கேட்ட மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்களா? அல்லது அசைவற்று உட்கார்ந்து இருந்தார்களா?

கோபா :—கேளுங்கள்! கேளுங்கள்! என்று கை தட்டி உற்சாகமாக வரவேற்ருர்கள்.

அட். ஜெல் :—பலம் பொருந்திய சமுதாயமாக அமைவதற்கு 'வருணாஸ்ரம தர்மம்' தொலைந்தாக வேண்டும் என்று கூறினீர்களா?

[8-ம் பக்கம் பார்க்க]

# இன்பத் திராவிடமே நமது இலட்சியம்!

## பிரிவோம் பிரிவோம் தனிநாடு அமைப்போம்!

### உடுமலை கனகராசனின் அறப்போர் முரசு!

*சிவகங்கையில் 30-9-50 அன்று தொடங்கிய இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டைத் திறந்துவைத்த உடுமலை நகராட்சிக் கழகத் தலைவர் **எம். எஸ். கனகராசன்** அவர்கள் ஆற்றிய திறப்பு விழாச் சொற்பொழிவின் சில பகுதிகள்:—*

தாய்மார்களே, பெரியோர்களே, தோழர்களே, உங்கள் அனைவர்க்கும் எனது வணக்கம். என்னை இம் மாநாட்டுத் துவக்க விழாவிற்குத் தேர்ந்தெடுத்தமைக்கு, மாநாட்டு வரவேற்புக் கமிட்டியாருக்கு எனது நன்றி உரித்தாகுக. என்னைவிட அறிவு, ஆற்றல் மிக்கார் பலரிருக்க என்னைத் தேர்ந்தெடுத்தது என்மீது கொண்ட அன்பும், நெடுநாள் இவ்வியக்கத்தில் பணியாற்றுபவன் என்கிற காரணமும் தவிர வேறு இருக்கமுடியாது என்றே கருதுகிறேன். மற்றும் இந்த வேளையில் எனது கருத்தினைத் தெரிவிக்க ஓர் வாய்ப்பு உண்டுபண்ணிக் கொடுத்ததாகக் கருதி சுருக்கமாக சில வார்த்தைகள் கூறி இம் மாநாட்டைத் துவக்கி வைக்கக் கருதுகிறேன்.

முதலாவதாக "**திராவிடம்**" என்பது "**தமிழகம்**" என்பதிலிருந்து மாறிவந்த சொல் என்பது பல மொழியாராச்சியாளர்களின் கருத்தாகும். திராவிட மொழிகள் என்பன தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலியனவாகும். இம்மொழிகளைத் தங்களுக்குரிய மொழியாகக் கொண்டவர்கள் அனைவரும் திராவிட மக்கள்; அதாவது தமிழ் சார்புடைய மக்கள் என்பதாகும். இவர்களைப் பொதுவாக தென்னிந்திய மக்கள் என்று கூறலாம். இம்மக்களுடைய நிறம், மொழி, உணவு, உடை, பண்பு முதலியவைகளில் ஒற்றுமை காணப்படுகின்றது. இப்படியுள்ள மக்கள் தங்கள் நாட்டைத் தாங்களே தங்கள் நன்மைக்கும், பண்புக்கும் ஏற்ப தனிநாடாகப் பிரித்து ஆட்சி செய்து வாழ வேண்டும் என்னும், இயற்கையாக ஏறபட்ட, நியாயமானது என்று உலகம் ஒப்புக்கொண்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கமே திராவிடப் பெருங்குடி மக்களின் இயக்கமாகும். திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் அடிப்படை நோக்கத்தில் ஒன்றேயாகும். ஆனால் கட்சி அமைப்பு முறையில் சற்று மாறுபட்டது என்பதே தவிர வேறு எவ்வகையிலும் ஒன்றே ஆகும். இவ்விரு இயக்கங்களும் இரண்டு சம நேர்கோடுகள். ஒன்றையொன்று மோதிக் கொள்ளாது, உதவியாகவே செல்லும் என்பதை நமது தோழர்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். எதிரிகள் இவ்விரண்டையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க நினைத்தால் ஏமாந்து போவார்கள் என்பது திண்ணம். இது நிற்க.

ஒவ்வொரு வர்க்கத்தாரும் (Nationality) ஒவ்வொரு வட்டாரம் அமைத்துக் கொள்வது ஏற்கனவே உலகத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட நீதி. ஆனால் நாம் அந்தக் காரணத்திற்காக மட்டும் தனி நாடு கேட்கவில்லை. திராவிட நாடு தனி நாடாகாமல் நம் மக்கள் சீராக வாழ முடியாது என்கின்ற அவசியம் ஏற்பட்டதின் காரணமாகத்தான் கேட்கிறோம். இந்திய யூனியனில் நாம் சேர்ந்துள்ளவரை நம் மொழி சீரழியும் என்பதையும், நமது பண்பு பாழாகும் என்பதையும், நமது செல்வம் சிதறடிக்கப்படும் என்பதையும், நமது வாழ்வு தாழ்வாகும் என்பதையும் கண்கூடாகக் கண்டுவிட்டோம். சிந்தனை செய்யாதவர்களுக்கு இந்த உண்மைகள் தெரியாமலிருப்பது, நம் குற்றம் அல்ல. ஆனாலும் நாம் விளக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

ஏன் வடநாட்டிலிருந்து தென்

னாடு பிரிந்தே ஆகவேண்டும் என்பதை விளக்கப் பல எடுத்துக்காட்டுகள் கூறமுடியும். ஆனால் உணவுப் பிரச்சினை ஒன்றே போதுமானது இதை விளக்க. நாம் மத்திய சர்க்காரோடு சேர்ந்திருப்பதால் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து காலாகாலத்தில் கொண்டுவர முடியாமல் நம் மக்களை பசிக்கும், பட்டினிக்கும் பலியாக்கி விட்டோம். இதற்கு விளக்கம் வேண்டியதில்லை, நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் வரிப் பணங்களை மத்திய சர்க்காருக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு, பிறகு, பிச்சை கேட்க இருகைகளை ஏந்திக் கொண்டு வடநாட்டுக்கு ஓடுவானேன்! இந்த நாட்டுக் காரியங்களில் எப்படி அவர்களுக்கு அக்கறை இருக்கும்? நம்மை, வடநாட்டுத் தலைவர்களை வணங்கும் மூட மக்களாகவைத்திருப்பதும், பொருள் சுரண்ட தென்னாட்டை சந்தையாக வைத்திருப்பதும்தான் அவர்கள் நோக்கம். நாம் சுதந்திரத்தில் எதனைக் கண்டோம்? 'இங்கிலீஷ்' போய் அந்த இடத்தில் "இந்தி" வந்தது. ஆங்கிலேய கவர்னர்கள் போய் வடகத்தியார் கவர்னர்களாக வந்தனர். இதை சொன்னால், சில காங்கிரஸ்காரர்கள் தென்னாட்டு அறிஞர்களாகிய திரு. சண்முகம் அவர்களுக்கும், திரு. ராஜாஜி அவர்களுக்கும், திரு. மத்தாய் அவர்களுக்கும், பதவி கிடைத்ததைப் பற்றிப் பேசுவார்கள். அந்தப் பதவி வடநாட்டாரிட்ட பிச்சை மாதிரி இருந்தது, இருக்கிறதே யொழிய, அதில் உரிமை இருந்த மாதிரியில் இல்லை. வேண்டும்போது கூப்பிடவும், வேண்டாதபோது விரட்டி விடவுமாகத்தான் இருந்தது என்பதை மறந்து விடாதீர்கள். பலமான மத்திய சர்க்கார் வேண்டும் என்ற கொள்கையால் மாகாணங்களின் உரிமைகள் பலியிடப்பட்டு விட்டன. மாகாண சுய நிர்ணய உரிமையை! ஒப்புக்கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்கள், சுதந்திரம் வந்ததும் கொள்கையை மாற்றிக்கொண்டு, மாகாணங்களை முழு அடிமை நிலைக்குஇறக்கிவிட்டார்கள்

தென்னாட்டவர் உழைப்பது, வடநாட்டவர் ஊதியம் பெறுவது. 'தென்னாட்டாருக்கு ஆறு அவுன்ஸ் ரேஷன், வடநாட்டாருக்கு பதினாறு அவுன்ஸ் ரேஷன். உழைப்பது இங்கே. ஊதியம் பெறுவது அங்கே! பாடுபடுவது இங்கே, பலன் பெறுவது அங்கே! இதை நினைத்தால் "மரம் இங்கே! மலர் அங்கே!' என்ற சினிமாப் பாட்டு நினைவிற்கு வருகிறது. வடநாட்டில் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய துணி, சர்க்கரை இவைகளின் தற்போதய கண்ரோல் விலை பழய கள்ள மார்க்கெட் விலையைவிட அதிகமாயிருக்கிறது! இது மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரத்தைக்கொடுத்ததின் விளைவு. மத்திய அரசாங்கத்தில் வடநாட்டுக்காரர்களுக்குத் தனிசலுகைகள்! சக்கைகள்தான் நம் வியாரிகளுக்கு இங்கே! மத்திய கவர்மெண்ட் கிராண்டுகள், கடன்கள் சுளுவாகக் கிடைக்கின்றன வடமாகாணங்களுக்கு! நாம் பறந்து பறந்து கேட்டாலும் கிடைப்பதில்லை. பொதுவாக "மதராசி" என்றாலே வடநாட்டானுக்கு ஒரு அலட்சியம்; காறி உமிழ்கிறமாதிரி ஒரு மரியாதை இல்லாத உணர்ச்சி! நாம் சுயமரியாதை இல்லாதவர்களாக, இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில், நம் மொழி, கலை, பொருள், வாழ்வு முதலியன குன்ற, ஏன் அவர்களுடன் இணைந்து வாழவேண்டும்? நாம் தனித்து வாழ நமக்கு கடல்வளம், மலைவளம், நிலவளம், கனிவளம் முதலியன சகலமும் இருக்க, நாம் ஏன் அவர்களுக்குக் கைகட்டி வாழவேண்டும்? இதை முதலில் காங்கிரஸ் தோழர்கள் நன்றாக சிந்திக்க வேண்டும்.

இந்தியா ஒரே நாடாக இருந்தால் உலகம் மதிக்கும் என்றும், தற்காப்புக்கு ஒரே யூனியனில் இருப்பது அவசியம் என்றும் சிலர் தவறுதலாக நினைக்கிறார்கள். இக்காலத்தில் எந்தப் பெரிய நாடும் தனித்து தன் சொந்த பலத்தில் வாழ்வதில்லை என்பது, மிகப்பெரிய நாடுகளாகிய ரஷ்யாவும், அமெரிக்காவும் மற்ற நாடுகளை தமக்கு நட்பு நாடுகளாக ஆக்கிக் கொள்வதில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றன என்பதிலிருந்து விளங்கும். மற்றும் நமக்கு அருகில் உள்ள இலங்கைத் தீவை எடுத்துக் கொள்ளுங்கள். நம் நாட்டிற்கும் அதற்கும் இணைவைத்துப் பார்த்தால் அது ஒரு கோழி முட்டை மாதிரியுள்ள தீவு, அவ்வளவு சிறு தீவாக இருந்தும், அந்தத் தீவின் ஆட்சியாளர்கள், இந்தியா என்னும் இந்தப் பெரிய நாட்டுக்காரர்களுக்கு எவ்வளவு கட்டுப்பாடுகள் செய்கிறார்கள். அங்கு போய் திரும்பி வருகிற இந்தியர்களை வழியில் எப்படி சோதித்து அனுப்புகிறார்கள். பெரிய நாட்டுக்காரர்களாகிய நாம் என்ன செய்ய முடிகிறது? ஆகவே பெரியநாடு சின்னநாடு என்பது பிரச்சினையல்ல. எந்த நாடும் தன் சொந்த பலத்தில் இனி தனித்து வாழ முடியாது. மற்ற நாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டுதான் வாழமுடியுமாதலால் பாதுகாப்புக்காக ஒன்றாக இருக்க வேண்டும் என்ற காலம் இது அல்ல. அப்படி அவசியம்

இருந்தால், திராவிடம் தனியாகப் பிரிந்து பின் பாதுகாப்பு விஷயத்தில் வடநாட்டாரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். யூனியனுடன் சேர்ந்து இருக்கவேண்டும் என்பதற்கு எந்த அவசியமும் இல்லை. பிரிந்து தனிநாடாக செய்து கொள்ள வேண்டும் என்பதற்கு அத்தியாவசியங்கள் பல இருக்கின்றன. பிரியாமல் வாழவே முடியாது என்பதற்கு பல நிர்பந்தங்கள் இருக்கின்றன என்பதை முதலிலேயே விளக்கியுள்ளேன். ஆகவே நம் திராவிடத்தைத் தனிநாடாக ஆக்கிக் கொள்வது நமது லட்சியம்.

நமது லட்சியத்தை அடைய நாம் சரியான முறையிலே திட்டம் தீட்டவேண்டும். தென்னாட்டார் அனைவரையும் ஒரு முகப்படுத்தும் முறையில் நமது திட்டம் அமைய வேண்டும். நாம் ஒரு பலமான ஐக்கிய முன்னணி ஏற்படுத்த வேண்டும்.

காங்கிரஸ் சர்க்கார் மக்களிடத்திலும், மக்கள் உரிமைகள் விஷயங்களிலும் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை நான் விரிவாக சொல்லத்தேவையில்லை. அதிகார போதையில் அவர்கள் மற்றக் கட்சிக்காரர்களின் உரிமைகளைப் பற்றியும், ஜனநாயக நெறியினைப் பற்றியும் கவலையே கொள்வதில்லை. சர்க்காரின் குறை, குற்றங்களை எடுத்துச் சொல்வது, எதிர்க்கட்சியாரின் உரிமைமாத்திரம் அல்ல, ஜனநாயக ரீதியில் மக்களுக்கு அவர்கள் செய்தாகவேண்டிய கடமையுமாகும். ஆனால் காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் அப்படி அவர்களுடைய தவறுகளை எடுத்துக்காட்டுபவர்களுக்கு ஒரே பதில்தான் வைத்திருக்கிறார்கள். "சர்க்காரைக் குறைகூறுபவர்களை நம்பாதீர்கள். அவர்கள் எல்லாம் விஷமிகள்" என்பதே அப்புனிதமான பதிலாகும். அண்ணா, பெரியார் போன்ற தலைவர்களை சிறைக்குள் தள்ளிவிட்டு ஹிட்லர் ஆட்சி நடத்துகிறார்கள்! வெட்கம், வெட்கம்! மக்கள் உரிமைகளை அறியாத மரக்கட்டைகள் இந்த ஆட்சியாளர்கள்!

"இப்பொழுதுதான் சுதந்திரக் குழந்தைக்கு மூன்று ஆண்டாகிறது. கொஞ்சம் பொறுத்திருங்கள்"—என்று பேசுகிறார்கள் தேசியவாதிகள். ஆனால், சுயராஜ்ய குழந்தை பிறந்ததிலிருந்து வருடத்திற்கு வருடம் நிலைமை மோசமாகிக்கொண்டே போகிறது! இந்தக் குழந்தையை இந்த லட்சணத்தில் வளர்க்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இங்கிலாந்து நமக்குக் கொடுக்க வேண்டிய சுமார் ஆயிரங்கோடி ஸ்டர்லிங் கடனில் பாதியைத் தீர்த்துவிட்டார்கள். வெள்ளையர் ஆட்சி முடிந்து இவர்கள் ஆட்சி துவங்கியபோது இந்தியாவின் கையிருப்புத் தொகையாக ரிசர்வ் பாங்கிலிருந்த 500 கோடியில் இப்போது 140 கோடிதான் பாக்கி இருக்கிறது. மிச்சம் அவ்வளவும் இந்தப் பாரதபுத்திரர்களால் வீண் செலவு செய்யப்பட்டுவிட்டது. இப்படி டம்பாசாரித்தனம்செய்கிறார்கள். ஆம், சுதந்திரக் குழந்தைக்கு கார்டியனாக இருக்க இவர்கள் லாயக்கில்லை. இனி சுதந்திரக் குழந்தையை காங்கிரஸ்காரர்கள் வசம் வளரவிடக் கூடாது. அப்படி விட்டால் நாளுக்கு நாள் நிலைமை படுமோசமாகிவிடும் என்பதற்கு சாட்சியம் தேவையில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

# தி. மு. க. கொடி ஏற்றுவீர்!

(புதுவைச் சிவம்)

(வானத்தின்மீது எ. மெட்டு)

திராவிடர் வாழ்வைச் சீருறக் காக்கும்
செம்மைசேர் கருங் கொடியே—எங்கும்
இராவிடம் இல்லை என்றிடச் செய்தே
ஏற்றுவீர் தோழர்களே!—நீங்கள் (ஏற்)

சாதிகள் பேதக் கொடுமையைத் தாங்கும்
சாத்திர மதம் வீழ்த்தி—நாளும்
நீதியும் நேர்மைச் செயலுமே ஓங்க
நெடுங்கொடி ஏற்றிடுவீர்—வானில் (ஏற்)

வறுமையில் நாளும் துன்புற்று வாழ்வோர்
வாழ்வினில் புதுமணமே—என்றும்
செறிந்திடச் செய்தே சமதர்மம் காக்கும்
சீர்க்கொடி ஏற்றிடுவீர்!—எங்கும் (சீர்க்)

வடவரின் சூழ்ச்சி ஆட்சியை இங்கே
மாய்த்திட வீறுகொண்டே—என்றும்
திடமுடன் வானில் திராவிடக் கொடியைச்
சிறந்திடச் செய்திடுவீர்!—என்றும் (சிறந்)

# பேச்சுரிமையைத் தடுப்பது பெருங்கொடுமை!

★

## இருந்தே ஆகவேண்டும் கம்யூனல் ஜி. ஓ!

★

### உணவுப் பொருளை இறக்குமதி செய்யுங்கள்!
### 'சுயதேவை' பேசி மக்களை மடிய விடாதீர்கள்!

★

## சிவகங்கை தீர்மானங்கள்!

சிவகங்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

1. திராவிட நாட்டிற்கும் திராவிடப் பெருங்குடி மக்களுக்கும், தமிழ்மொழிக்கும், பல்லாண்டுகள் தொண்டு செய்து அந்தப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையில், சேலம் கல்லூரித் தலைவர் தோழர் இராமசாமி அவர்களும் தமிழ்க் கடல் தோழர் மறைமலை அடிகளாரும் இயற்கை எய்தியது குறித்து இம்மாநாடு துக்கமுறுவதுடன் தனது ஆழ்ந்த அநுதாபத்தை அன்னார் குடும்பத்தினர்க்கும் அவர்களைப் பிரிந்து வாடும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

முன்மொழிந்தவர்:—தலைவர்

2. பொதுவாகச் சென்னை மாகாணத்திலும் குறிப்பாக இராமநாதபுர மாவட்டத்திலும் உணவு நெருக்கடியின் காரணமாக மக்கள் பட்டினியால் மடியுமளவுக்கு வாழ்வு சீரழிந்து வருவதால் வெளி நாடுகளில் [illegible] உணவை இறக்குமதி செய்ய சென்னை அரசியலாருக்கு, டெல்லி சர்க்கார் இந்த நெருக்கடியான நிலையை உணர்ந்தாகிலும் அனுமதி தரவேண்டுமென்று எச்சரிப்பதுடன், சென்னை சர்க்காரும் இதற்கான முயற்சியை எடுத்து உணவு நெருக்கடியைத்தீர்க்கமுயற்சிக்க வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்மொழிந்தவர்:—

ஈரோடு அப்பாவு

வழிமொழிந்தவர்: — இராஜமாணிக்கம்

3. பொதுவாக திராவிட சமுதாயத்திற்கும் சிறப்பாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அவர்களது வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் காரணமாய்— உயிர்நாடியாய் விளங்கி வந்த வகுப்புவாரி உரிமையானது நேற்று முளைத்த அரசியல் திட்டத்தின் துணை கொண்டு சாகடிக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயன்று சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துள்ள சென்னை அரசியலாரின் நன் முயற்சியைப் பாராட்டுவதோடு அப்பீலிலும் நீதிகிடைக்கவில்லையானால் அரசியல் அமைப்பையே திருத்துவதற்கான பெருமுயற்சியை ஆண்மையோடு செய்ய வேண்டுமென்று சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிந்தவர்: — A. K வேலன்

வழிமொழிந்தவர்:—

1. ஞானமுத்து
.2 பி. வீரராகவன்

ஆசிரியர், ஆரம்பக்கல்வி

4. சென்னை மாகாணத்தில் 5 லட்சம் கைத்தறிகளும், அவற்றை நம்பிவாழும் மக்கள் 30 லட்சம் பேர்களும் இருக்கிறார்கள். இதனால் இந்த மாகாணத்தில் கைத்தறித் துணிகள் மிகப்பெரிய அளவில் உபரியாக உற்பத்தியாகின்றன. இதுபோலவே நம் மாகாணத்தில் மில்லிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. சர்க்காரின் இப்போதைய டெக்ஸ்டைல்பாலிஸியானது கைத்தறி ஜவுளி ஏற்றுமதியைத் தடுத்து நூல் ஏற்றுமதியை அனுமதித்துக் கொண்டிருப்பதால் கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காமலும்,

(14-ம் பக்கம் பார்க்க)

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கோபா:—ஆம். உரைத்தேன்.

அட். ஜெல்:—ஜஸ்டிஸ்கட்சி நசித்துப்போன பிறகும் கூட, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிணக்கு தென்னாட்டில் தீர்ந்தபாடு இல்லை என்று கூறினீர்களா?

கோபா:—ஆம், கூறினேன்.

அட். ஜெல்:—'நாம் எவ்வளவோ வகையில் முன்னேறி இருக்கிறோம் என்றாலும், இத்துறையில் நாம் இன்றும் பிளவுபட்டுக் கிடக்கிறோம், என்று குறிப்பிட்டீர்களா?

கோபா:—ஆம். குறிப்பிட்டேன்.

அட். ஜெல்:—'பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைக் கண்டு சாதாரணமான பார்ப்பனனும் அழுக்காறுகொள்வது ஏன்' என்றும் இயம்பினீர்களா?

கோபா:—ஆம். இயம்பினேன்.

அட். ஜெல்:—'ஒவ்வொரு பார்ப்பனனும் எல்லா நலன்களையும் ஏகபோகமாக ஆக்ரமித்துக் கொண்டு இருப்பவன் என்று ஒவ்வொரு பார்ப்பனனல்லாதவனும் நினைத்துக் கொள்ளும் நிலை எப்படி இருக்கிறது' என்றும் கேட்டீர்களா?

கோபா:—ஆம், கேட்டேன்.

அட். ஜெல்:—'சட்ட நிபுணர்களாக இருந்தாலும் கூட, நம்மில் சிறந்தவர்களையும், இந்த வகுப்பு நோய் விட்டு விலகாமல் இருப்பது இரங்கத்தக்கது' என்றும் எடுத்துக் காட்டி இருக்கிறீர்களா?

கோபா:—ஆம். எடுத்துக் காட்டியுள்ளேன்.

அட். ஜெல்:— (மாணவர்கள் வகுப்புரிமை பற்றின) 'நீதிமன்றத் தீர்ப்பு கேட்டு, குறிப்பிட்ட சமூகத்தினர் அனைவரும் பெரியதோர் மகிழ்ச்சி கொள்ளவும், அதற்கு நேர் விரோதமாக மற்றோர் சமூகம் வேதனைப் படவுமான நிலைமை எப்படி இருக்கிறது' என்றும் வினவினீர்களா?

கோபா:—ஆம். வினவினேன்.

அட்.ஜெல்:—'நமது சமுதாயம் எந்த வகையில் அமைந்திருக்க வேண்டுமோ, அந்தச் சிறந்த முறையில் அமைந்திருக்கவில்லை என்பதை இவைகள் எடுத்துக்காட்டுகின்றன' என்று பேசினீர்களா?

கோபா:—ஆம் பேசினேன்.

அட்.ஜெல்: — 'சாமர்த்தியமான நிலையில் காட்சியளித்துக் கொண்டு இருக்கும் இந்தச் சமூகப் பிணக்கைக் குறைக்கும் முயற்சி நமது சமூக ஊழியத்தில் இடம் பெறக் கூடாதா'—என்றும் தூண்டினீர்களா?

கோபா:—ஆம் தூண்டினேன்.

அட்ஜெல்:—'இது விவாதத்தைக் கிளப்பும் பிரச்னை' என்றும் குறிப்பிட்டீர்களா?

கோபா:—ஆம் குறிப்பிட்டேன்.

அட்ஜெல்:—'இத்தகைய விவாதத்துக்குரிய பிரச்னைகளுக்கு இடமளிக்கும் பழக்கம் நமக்கு அறவே கூடாதாயினும், நம்மைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருக்கும் பிரச்னைகளைக் கண்கொண்டு காண மறுப்பதால் ஏற்படப்போகும் பலன் என்ன' என்றும் இடித்துக் கூறினீர்களா?

கோபா.—ஆம் இடித்துக் கூறினேன்.

அட்ஜெல்: — 'நாம் நோயைத் தெரிந்துகொண்டு இருக்கிறோம்; அதைப் போக்குவதற்கான மருத்துவ முறையை அறிந்து கொள்வதற்கு ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறோம்' என்று வருத்தப்பட்டீர்களா?

கோபா: — ஆம் வருத்தப்பட்டேன்.

அட்ஜெல்:—'தேவையான அரிசி கிடைக்காதபோது, நீங்கள் பெறுகிற அளவுகூட மற்றவர்கள் அரிசி பெறாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில், உங்களுக்கு அதிகம் அரிசி வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்பது சமுதாயத்துக்குச் செய்யும் மகத்தான துரோகம் என்பதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளவுமில்லை என்றுதானே பொருள்படும்' என்றும் குறிப்பிட்டீர்களா?

கோபா:—ஆம் குறிப்பிட்டேன்.

நீதிபதிகள்:—(ஒரே குரலில் அட்வொகேட் ஜெனரலைப் பார்த்து) மேலும் கேள்விகள் தேவை இல்லை. தாங்கள் கேட்கும் கேள்விகள் ஒன்றுக்காவது, குற்றவாளி மறுப்புக் கூறவில்லை. எனவே, தங்களுடைய குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை என்று விளக்கமாகி விட்டது. இப்போதுள்ள பிரச்னை எல்லாம், மேற்படி பேச்சு, 153 அ. பிரிவின் கீழ்குற்றம் என்று கொள்ளக்கூடியதுதானா என்று நிர்ணயிக்கவேண்டியதேயாகும். அது எங்கள் பொறுப்பு. தீர்ப்பு நாளை கூறப்படும்.

* * *

மறுநாள் தீர்ப்பு தரப்படுகிறது. சென்னை சர்க்காரின் நிதி அமைச்சர் கோபாலர், இந்தியக் குடிமக்களுக்கிடையில், கலக உணர்ச்சியை உண்டாக்கத்தக்க விதமாகப் பேசி இருப்பது, இ. பி. கோ. 153-அ. பிரிவின்படி குற்றமென நாங்கள் கருதுவதால், பின் கண்டபடி தீர்ப்பளிக்கிறோம்.

**ரூ. 700 அபராதமும், ஆறுமாத வெறுங்காவல் தண்டனையும் தருகிறோம்.**

* * *

சென்னை சர்க்காரின் நிதி அமைச்சர் கோபாலர், மதுரையில் சமூக ஊழியர் மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவை, ஒரு முறை அல்ல பன்முறை நாம் படித்துப் பார்த்தோம். பரவசப்பட்டோம். நம்மையும் அறியாமலே நாம் ஆநந்தக் கூத்தாடினோம்.

நமது தி.மு. கழகத்தில், கோபாலர் எப்பொழுது உறுப்பினராகச் சேர்ந்துவிட்டார் என்று அறிய ஆசைகொண்டோம்.

நமது சமூகத்தைச் சீரழித்து வரும் தொழுநோய் 'வருணாஸ்ரம தர்மம்.' நிதி அமைச்சரின் தெளிவான தீர்ப்பு இது. இது அழிக்கப்படாதவரையில், நமது சமுதாயம் நலம்பெறாது, நாடும் முன்னேறாது—இதுவும் கோபாலர் கருத்து.

நிலைக்கேற்ப, வீற்றிருக்கும் இடத்துக்கேற்ப, பெற்றுள்ள பயிற்சிக்கேற்ப, கோபாலர், மதுரமான மொழியிலே, நமது சமுதாயத்தை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டு இருக்கும் சனாதனத் தீராப் பிணியைச் சுட்டிக் காட்டுகிறார்—சாடுகிறார். சட்டம் சீறவில்லை; அவரை சிறையிலே தள்ளமுந்தவில்லை.

ஆனால், அதே பணிபுரியும் நம்மை, நமது தி. மு. கழகத் தோழர்களை, சட்டம் தேடுகிறது; சிறையில் தள்ளிப் பூட்டுகிறது.

இதோ கோபாலர், 'நமது' சர்க்காரின் நிதி அமைச்சர், அதேபணி புரிகிறார் — சுதந்திரமாக வெளியிலே உலாவுகிறார். அவர்மீதும் வழக்குத் தொடுக்க சர்க்கார் முன் வந்தால், அவருக்கு என்ன கிடைக்கும் என்பதைத்தான் கற்பனையாகத் தரப்பட்டு இருக்கிறது இங்கு:

நிதி அமைச்சர் கோபாலரின் மாறிய மனப்போக்கு, நமது வெற்றி; நமது இலட்சியம் வெற்றி பெறும் நாள் விரைகிறது என்பதற்கு ஓர் முன் அறிவிப்பு. வாழ்க கோபாலர். வெல்க கோபாலர்தம் பெரும்போக்கு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை, மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்தித் தரும்படி வேண்டிக் கொண்டனர்.

அந்த வேண்டுதலுக்கிணங்க, **தோழர் நடராசன்**, மாநாட்டுத் தலைமையை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகம், உண்மைத் தொண்டர்களின் உழைப்பை மதித்துப் பாராட்டும் சான்றாண்மை மிக்கதோர் சிறந்த அமைப்பு என்பது, தன்னைப் போன்ற தொண்டர்கட்குத் தலைமைப் பொறுப்பை வழங்குவதிலிருந்தே நன்கு விளங்குகிறதென்றும், இதற்கு முன்னால் நாம் அனைவரும் இருந்து பணியாற்றிய திராவிடக் கழகத்தில் தொண்டர்கள் கூட்டம் துச்சமென ஒதுக்கப்பட்டு பெரிய மனிதர்கள் என்னும் பெயர் படைத்த "பெருங்குணவான்"களுக்குமட்டுமே இடம் அளிக்கப்பட்டதென்றும், நம்முடைய முன்னேற்றக் கழகத்தில் அத்தகு கயமைப் பண்பு துளியும் இடம் பெறுமல் உழைப்பாளிகளைப் போற்றும் உத்தமத் தன்மை மிகுந்திருப்பது மிகமிக மகிழ்ச்சியூட்டும் நிலைமை என்றும் எடுத்துக் கூறிவிட்டு, பிறகு, அறிஞர் அண்ணாவை, வகுப்புத் துவேஷ விதைகளைத் தூவினார் என்ற பொய்க் காரணத்தைக் கூறி வெஞ்சிறையில் அடைத்த "வீராதி வீரர்களின்" ஆணவப் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

பத்தே நாட்களில், அண்ணா, வெளியே வரும் விதமாக, நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நிகழ்த்தியும், வேறு பல கிளர்ச்சிகள் புரிந்தும், தங்கள் கண்டனக் குரலெழுப்பி, ஆட்சியாளரை அஞ்சி கடுங்கும்படிச் செய்த திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தன் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்.

நாட்டிலே உணவுப் பஞ்சத்தை உருவாக்கிவிட்டு, அந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கான வழிவகைகள் ஏதும் வகுக்காது, உல்லாச ஊர்ப்பவனி வந்துகொண்டிருக்கும் அருமை அமைச்சர்களின் சிறுமைப் போக்கைப் புட்டுப்புட்டு விளக்கினார்.

அடக்குமுறை அம்புகளை வீசி, போலீஸ் தடிகளைச் சுழற்றி, துப்பாக்கிக் குண்டுகளைக் காட்டி, காராக்கிருகங்களை நிரப்பி, திராவிட இயக்கத்தை ஒடுக்கிவிடலாமென்று ஆட்சியாளர்கள் எண்ணும் எண்ணத்தில் மண் விழுவது உறுதி என்பதைப் பல ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

பார்ப்பன இனத்தவர்கள் வீணாக திராவிட இனத்தவருடன் மோதிக் கொண்டால் நஷ்டம் அவர்களுக்கே தவிர, திராவிட இனத்தவர்கட்கு இல்லை என்பதையும், எனவே அவர்கள் நம்முடன் மோதிக்கொள்ளாமல் இருந்தால் தான் அவர்கட்கு வாழ்வு உண்டு என்பதையும் எழில்பட எடுத்துரைத்தார்.

டில்லி சர்க்கார் மேலும் மேலும் நம்முடைய உரிமைகளைப் பறிக்கும் எதேச்சாதிகாரப் போக்கிலேயே சென்றுகொண்டிருந்தால், அவர்களின் ஆட்சி முறையை எதிர்த்து, நாட்டிலே, பெரியதோர் புரட்சி எழுவது உறுதி என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இறுதியில், சிறைமீண்டு வந்திருக்கும் சிங்க ஏறு அண்ணாவைப் பார்த்து, "சிந்தனைச் சிற்பியே! செந்தமிழகத்துச் சீர்மிகு தலைவரே! எங்கள் இதய கீதமே! தென்னாட்டுத் தளபதியே! ஒரு சொல்—ஒரு சொல்—ஒரே ஒரு சொல் கூறுங்கள்—அடக்கு முறைக் கொடுங்கோன்மையை எதிர்த்து அறப்போர் புரிய அனுமதி தந்துவிட்டேன் என்று ஒரு வார்த்தை கூறுங்கள் போதும்—தம்பிமார்கள் நாங்கள், ஆயிரமாயிரவர்கள், களத்திலே குதிக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்—வெற்றி மங்கையை முன்னேற்றக் கழக வாயிலில் உடனே கொண்டுவந்து நிறுத்துகிறோம்" என்று பணிவன்

(20-ம் பக்கம் பார்க்க)


**நண்பர்களுக்கு ஓர் அரிய நாடகவிருந்து**

14—10—50 சனி இரவு 8-30 மணிக்கு
சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

**அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள்**
தலைமையில்

இசைத் தென்றல் **M. M. மாரியப்பாவும்**
அவரது குழுவினரும்

**“விரோதி”** சமூகச் சித்திர நாடகம்

இத்துடன் சினிமா ஸ்டார்
**சி. டி. ராசகாந்தம்** பார்ட்டியாரால்
**“வினோத சாமிகள்”** காமிக் இடையிடையே
நடைபெறும்

★

கட்டணம்: ரூ. **5, 3, 2, 1.**

10—10—50 முதல் டிக்கட்டுகள் கிடைக்குமிடம் :—

கா. அப்பாதுரை, 10, அருணாசல ஆச்சாரி தெரு, சேப்பாக்கம்.

சாமி, 71, ஸ்டாரன்ஸ் ரோடு, வேப்பேரி

K. M. கண்ணபிரான், 'கலவாய் வீடு' சோலையப்பன் தெரு, சென்னை.

டாக்டர் கணேசன், 202, தங்கசாலைத் தெரு, ஜி. டி. சென்னை

# சுயதேவைத் திட்டம் கவைக்குதவாது!

## வீணான முயற்சி! வேண்டாத வேலை!

## பஞ்சம் தலைவிரித்தாட மஞ்சம் அமைக்காதீர்!

### ஆட்சியாளர்கட்கு இராஜசேகரன் அறிவுரை.

★

*சிவகங்கை மாநாட்டின் வரவேற்புத் தலைவர், பிரபல வழக்கறிஞர், திராவிட இன உணர்ச்சியின் நடமாடும் சின்னம், இளஞ்ஞேறு, **தோழர் க. இராஜ சேகரன் பி. ஏ. பி. எல்.** அவர்கள், மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப்பேசுகையில் ஆற்றிய அரிய சொற்பொழிவு இது :—*

வரலாற்றின் அடி நாள் தொட்டு வையத்திற்கு நாகரிகத்தை, நற்பண்பைப் போதித்த இனம், ஆயிரமாயிரமாண்டுகளாக அடிமைப்பட்டு - அழிக்கப்பட்டு—அல்லலுற்றுக் கிடப்பதைக் கண்டு—அதைத் தட்டி எழுப்பி, அறிவூட்டி வாழவழி காட்டிய குற்றத்திற்காக, சிறையிலே தள்ளப்பட்டு,—நாட்டின் சூழ் நிலையிலே பெரிய மாற்றம் மேற்பட்டிருப்பதைக் கண்டு அஞ்சிய சர்க்கார், தண்டனையை ரத்து செய்ய—விடுதலை பெற்று, எம்மிடை வீற்றிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களே!

எம் அழைப்பினை ஏற்று, எம்மைச் சிறப்புவிக்க—மாநாட்டிலே தெளிவுபெற—திட்டங்கள் காண—கடமையாற்ற வந்திருக்கும் தாய்மார்களே! தோழர்களே!

உங்களனைவரையும், நாட்டின் எதிர் காலத்தின் சார்பாக, மாநாட்டின் வரவேற்புக் குழுவின் வாயிலாக, ஆசையோடு வரவேற்கிறேன்.

தெளிவோ, தீர்க்கமோ இல்லாத சர்க்காரின் விசித்திர வலிப்புகளின் நித்திய விளைவாக, நம் லட்சியத்திற்கு எப்படிப் பிறிதொரு வழியிலே, உரம் சேர்ந்து கொண்டு இருக்கிறதோ, அதைப்போல, நம் அண்ணாவின் மீது வழக்குத் தொடுத்ததன் மூலமாக, இம் மாநாட்டிற்கு நல்ல ஒரு விளம்பரம் கிடைத்திருக்கிறது. அதற்காக ஆட்சியாளர்கட்கு நம் நன்றி.

உணவுப் பொருள்களின் விலைகள் எட்டமுடியாதபடி உயர்ந்து கொண்டே இருப்பதும், பட்டினிச் சாவுகள் மலிந்து கொண்டேபோவதுமான, இந்தப்பயங்கர நாட்களிலே நாம் கூடுகிறோம். 'நம்ம சர்க்கார் இருக்கிறது, **கட்டுப்பாடு** (Controls) இருக்கிறது, பங்கீடு முறை (Rationing) இருக்கிறது, வீடு வீடாக நுழைந்து விவசாயிகளின் வயிற்றிலிருக்கும் உணவைக் கூடக் **கொள்முதல்** செய்துவர அதிகாரிகள் இருக்கிறார்கள் (Procurement Scheme), பிறகு, பயமேன்? என்று ஒவ்வொரு விருந்திலும், பேச மறந்து விடுவதில்லை இந்த மந்திரிகள்! எல்லாம் இருக்கின்றன. யாரும் இல்லை என்று சொன்னதில்லை. ஆனால் இவைகளால்தான் இவ்வளவுதொல்லை என்று சொல்லுகிறோம்.

சர்க்காரின் **சுய தேவைப் பூர்த்தி திட்டம்** (Self Sufficiency Scheme) நாட்டிலே பஞ்சம் தலைவிரித்தாடுவதற்கு—மக்கள் சாவோடு கொஞ்சுவதற்கு, மஞ்சம் அமைத்துக் கொடுத்தது. நாட்டிலே நல்ல விளைவு இருந்தாலும், பூரணமான பலன் இருந்தாலும், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, உணவு எப்போதும் கிடைத்ததே இல்லை, நம் மாகாணத்தில். வெளிநாடுகளிலிருந்து, சிறப்பாக பர்மாவிலிருந்து அரிசி வந்துதான், நம் உலை பொங்கி இருக்கிறது. நாட்டு மக்களுக்கு இந்த உண்மை தெரியாதிருக்கலாம். ஆனால் நம் சர்க்காருக்கு,—புள்ளி விவரங்களிலே புரண்டு கொண்டேயிருக்கும் மேதைகளுக்குத் தெரியாமலிருந்திருக்க முடியாது. இந்த உண்மையைத் தெரிந்திருந்தும், நாட்டில்

ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலையை அறிந்திருந்தும், கருவிலே அழியவேண்டிய இந்த சுய தேவைப் பூர்த்தித் திட்டத்தைக் கொண்டு வருவது போன்ற கொடுமை, எந்த நாட்டின் வரலாறும் கண்டறியாதது. நம் நாட்டு நீரோ, ரோமாபுரி எரியும் போது வீணைவாசிக்கவில்லை, பெற்றோலைக் கொட்டுகிறான்.

சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதுதான், மறுப்பில்லை. ஆனால் எப்போது, எந்த உருவிலே, அத்திட்டத்தைக் கொண்டு வருவதென்பதைச் சிந்தித்திருக்க வேண்டாமா? நல்ல விளைவிற்கான ஏற்பாடுகள் செய்தாகவில்லை! நிலத்தைப் பெருக்குவதில், நீரைக்கொணருவதில், பரிவு காட்டவில்லை! நல்லுழைப்பை நல்க, உழவனுக்குக் காப்பளித்து ஊக்கவில்லை! இந்த நிலையிலா சுய தேவைப் பூர்த்தி உபந்யாசம்? உயிர் ஊசலாடும் நிலையிலுள்ளவனுக்குச் சொல்லும் நீதியா இது? எத்தனை எத்தனை துறைகள், வெளிநாட்டான் நம்மைச்சுரண்டிப் போவதற்கு அமைந்து இருக்கின்றன- அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அந்த வழியிலெல்லாம் நாட்டையே கொள்ளைபோக விட்டுவிட்டு, உயிர்ப் பிரச்னையிலா இந்தத் திட்டம்? எதற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்? உணவுப் பிரச்னையைத் தீர்க்கவா அல்லது மக்கள் உயிரைப் போக்கவா? அதுதான் எனக்குப் புரியவில்லை.

நாட்டு மக்களைப்பற்றி, அவர்கள் வாழ வேண்டும் என்பதைப் பற்றி, இந்த ஆளவந்தாருக்குச் சிறிதாவது அக்கறை இருந்தால், இந்த சுயதேவைப்பூர்த்தி திட்டத்தை, முதலில் குழி தோண்டிப் புதைத்து விட்டு, வெளி நாடுகளுக்கு விரைந்தோடிச்சென்று, வெட்டிப் பேச்சுக்கும், விரயத் திட்டத்திற்கும் செலவிடும் காலத்தையும் காசையும் பிச்சைப் பாத்திரமாக்கி, மக்களுக்காக உணவு தேடி வரவேண்டும்.

கஞ்சி குடிக்கக்கூட, மத்திய சர்க்காரைக் கெஞ்சியாக வேண்டிய நிலை, ஒழிக்கப்பட வேண்டும். மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைப் பார்த்துத் தெளிவாகச் சொல்லிவிடவேண்டும், "உங்கள் நாட்டுக் கோதுமைக்கு, வேறு வெளி நாட்டிலே மார்க்கெட் கிடைக்க முடியாது என்பதற்காக, எங்கள் நாட்டிற்கு வெளியிலிருந்து வந்துகொண்டிருந்த அரிசியை நிறுத்திவிட்டு, பஞ்சநிலையை உற்பத்தி செய்து, உங்கள் கோதுமைக்கு நல்ல மார்க்கெட் தேடிக்கொடுத்த சூட்சமத்தை, மக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள். பம்பாயிலும், மத்திய மாகாணத்திலும், 16-அவுன்ஸ் -பூராவும் பழக்கப்பட்ட உணவையே கொடுத்து வருவதும், இந்த நாட்டில் 6 அவுன்ஸ்-சாப்பிட்டறியாக, சாப்பிட முடியாத உணவுப் பொருளை, வாரத்திலே ஏழு நாட்கள் போக மீதி நாட்களில் வழங்குவதும், அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. இந்த நிலை வளர்ந்தால் 'வங்காள'மாகிக் கொண்டிருக்கும் திராவிடம் அரசியல் 'அஸ்ஸா'மாக மாறிவிடும்" என்று எச்சரிக்கவேண்டும்.

உழைப்பை நல்கி, கேட்ட கேட்ட வரியை எல்லாம் கொட்டிக்கொடுத்து, வாழ்விழந்து கிடக்கும் நாட்டின பாட்டாளி வர்க்கத்திற்குப் படிக்க வசதி இல்லை. தகுதி, திறமை என்று கூறி விரட்டப்படுகின்றனர் அன்னார்! உழைத்துப் போட மட்டும்தான் அவர்கட்குத் தகுதியாம்! திறமையாம்! அந்த உழைப்பின் பலனை உண்டு களிக்க, கல்லூரிகளில் நுழைய அவர்கட்கு உரிமை கிடையாதாம்! உரிமை வேண்டும் என்று கேட்பது வகுப்புவாதமாம்! அந்த வகுப்புவாதம் அரசியல் திட்டத்திற்கு விரோதமாம்! இப்படிக் கூறுகிறார்கள் மத்திய சர்க்கார். இதை நம்பிக்கொண்டிருக்க, காங்கிரஸில்கூட, இப்போது ஆளில்லை என்பதை, மத்திய சர்க்கார் உணர்ந்தாக வேண்டும். மக்களுக்கு வகுப்புரிமை வழங்கும் முறையிலே, அரசியல் அமைப்புத் திட்டம், திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று எச்சரிக்க விரும்புகிறோம். கல்வித் துறையிலும், மத்திய-மாகாண அரசாங்க அலுவல்களிலும், சர்க்காரின் உதவி பெறும் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும், அந்தந்த வகுப்பாரின் எண்ணிக்கை விகிதப்படிதான், ஆள் அனுமதிக்கப்படவேண்டும். தற்காலிக நியமனங்களில் கூட, இந்த நீதி, மிகவும் கண்டிப்பான முறையிலே, கொண்டு செலுத்தப்படவேண்டும். தவறினால், ஆளவந்தாரும் தவறி விழ ஏதுவாகுமென்று அறிவிக்க அவாவுறுகிறேன்.

ஜமீன்களை, இனாம்களை ஒழிக்கிறோம் என்று சண்டப்பிரசண்டம் செய்த வீரர்கள், பாதிக் கிணறு தாண்டியதோடு, அதனை மறந்துவிட்டார்கள்- மிகவும் ஆபத்தான சங்கதி! இனாம் ஒழிப்புச் சட்டம் வரும், வரும் என்று சொல்லிக்கொண்டிருந்ததும், அடங்கிவிட்டது.

தலைமுறை தலைமுறையாக, வியர்வையை — கண்ணீரைப் பாய்ச்சி, கால் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த இனாம் கிராமக் குடிகள், இனாம்தாரர்களின் கொடுமை தாளாது துடிக்கின்றனர்.

இனாம்தாரர்களில் பெரும்

பாலோர் பார்ப்பனர்கள். வடக்கிருந்து வந்தவர்களுக்கு, வடக்கே நல்ல செல்வாக்கு இருக்கத்தானே செய்யும்! மத்திய சர்க்காரும் மனம் வைத்தது. இனாம் சட்டம் பிணமாயிற்று — நாற்ற மெடுத்துவிட்டது. எங்கே இனாம் சட்டம்? கேட்கின்றனர் மக்கள்!

இனாம் அமைப்பு முறையை இன்னமும் ஒழிக்காது வைத்திருப்பது — ஜமீன் ஒழிப்பிற்குப் பின்னும் இருக்க விடுவது, பெருந்தவறு என்பதை உணர வேண்டும் இந்த சர்க்கார். இந்து அற நிலையப் பாதுகாப்பு மசோதாவைக் கொண்டுவந்து, மக்களின் அதிருப்தியைக் குறைத்துக்கொண்ட ஆளவந்தார்கள், இனாம் சட்டத்தை மட்டும் மறந்துவிடுவது, வழக்கமாக வழுக்கிக் கொண்டிருக்கும் பண்பிற்குப் பிறிதொரு எடுத்துக்காட்டாக அமைந்து, மக்களின் வெறுப்பைத் தேடித்தரும் என்பதை நினைப்பூட்ட விழைகிறேன்.

கடைசியாக இவர்கள், எழுத்துரிமை பேச்சுரிமைகளை அழிக்கச்செய்யும் முயற்சி, இவர்களை அழித்துவிடும் என்பது, சரிதம் சொல்லும் செய்தி. ஆனால் ஒரு வகையிலே இந்த சர்க்காரை நாங்கள் பாராட்டவேண்டியவர்களாய் இருக்கிறோம். 'ஆரியராவது, திராவிடராவது, எல்லாம் கற்பனை' என்று தீக்கோழித்தனம் செய்த காங்கிரஸின் சர்க்காரே, 153 A-I.P.C.ப்படி எங்கள் மீது வழக்குத் தொடுக்கிறதென்றால், இரு வேறு தனித்தனி இனங்கள் இருப்பதை, சட்டபூர்வமாக ஒப்புக்கொண்டுவிட்டது என்பதைத் தவிர, அதற்கு வேறு பொருளில்லை. பேசிப்பேசி உண்மையை மறைத்துவிடலாமென்று இதுவரை எண்ணியிருந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள், உண்மையை உணர்ந்து கொண்டதற்காகப் பாராட்டுகிறோம். மற்றபடி- மக்களுக்குள்ளே பகைமையையோ, துவேஷத்தையோ உண்டு பண்ணுவதையே கருத்தாகக் கொண்டிருப்பவர்கள் நாங்களல்ல என்பதையும், மக்களைப் பிறப்பிலே பிரித்து, ஏற்றத்தாழ்வுகள் கற்பித்து, மதமென்ற மடத்திரையிட்டு மறைத்து, நாட்டை இடுகாடாக்கியிருக்கும் நிலையை மாற்றி, சமத்துவபுரியைச் சமைப்பதற்காகவே, நெஞ்சாரப் பாடுபடுகிறவர்கள் நாங்கள் என்பதையும் மக்கள் மன்றத்தில் நிரூபித்தே தீருவோம் என்று சொல்லி உங்களனைவரையும் வரவேற்கிறேன். வணக்கம்.

---

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

நேரடியான அனுபவமே போதுமானது இது மத்திய சர்க்கார் யோக்கியதை.

மாகாண சர்க்காரோ அரசாங்க பொருளாதார வண்டியைக் குடைசாய்த்து கஜானாவை காலியாக்கிவிட்டார்கள். கல்விக்குக் கேட்டால் பணமில்லை. பள்ளிக்கூடம் கட்ட பணம் இல்லை! ஆஸ்பத்திரி கட்டப் பணமில்லை! வியாதியஸ்தருக்கு மருந்து வாங்கப் பணமில்லை! நீர்த்தேக்கங்கள் கட்டி அதிக உணவு உற்பத்தி செய்யப் பணம் இல்லை! குடி தண்ணீர் சப்ளைக்குப் பணம் இல்லை! இப்படியே மக்களுக்கு அவசியத் தேவைகளுக்குப் "பணம் இல்லை" என்பதையே பல்லவியாகப் பாடுகிறார்கள். ஏனென்று கேட்டால் கள்ளுக்கடை ஒழித்தார்களாம், அதுவும் வெற்றியில்லாத ஒழிப்புதான். இதை நினைத்தால் மக்களுக்கு கல்வி, உணவு, சுகாதாரம் முதலிய வசதிகளுக்கு வேண்டிய பணப்பாலைக் கொடுக்கும் பசுவைக் கொன்றுவிட்டு அதன் தோலை உரித்து செருப்புத் தானம் செய்த பழமொழி ஞாபகம் வருகிறது. அந்த செருப்பும் பித்தல் செருப்பு! யாராவது பசுவைக்கொன்று செருப்பு தானம் செய்வானா? அது நியாயமோ, புத்திசாலித்தனமோ இல்லையே! மக்களுக்கு வேண்டிய முக்கியப் பிரச்சினைகளுக்குப் பணமில்லை என்று சொல்லிவிட்டு, பிர்க்கா அபிவிருத்தி என்ற உதவாக்கரை திட்டத்தை நடத்த கோடிக் கணக்கில் பணத்தைப் பாழாக்குகிறார்கள். இதுவும் கட்சிப் பிரசாரத்திற்குத் தான். இது மாத்திரமா! மற்றும் ஐம்பது லட்சம், கோடி என்ற கணக்கில், சர்க்கார், பொதுமக்கள் பணத்தை, காங்கிரஸ் எலக்ஷன் பிரசாரம் செய்ய, மது ஒழிப்பு பிரசாரம் என்ற பெயரால் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். முன், ஜஸ்டிஸ் மந்திரிகள் காலத்தில் சொற்ப செலவில் "மிதக்குடிப் பிரசாரம்" செய்தபொழுது வாய் கிழிய சர்க்கார் பணத்தில் கட்சிப் பிரசாரம் செய்வதாகக் கூக்குரலிட்ட காங்கிரஸ் கனவான்கள்தான் இப்போது இப்படி நடந்துகொள்கிறார்கள். நீங்களே கூறுங்கள், நீதி உணர்ச்சி என்பது மருந்துக்காவது இவர்களிடத்தில் இருக்கிறதா?

குரங்கு கையில் பூமாலை கிடைத்தமாதிரி இந்த "வீராதி வீரர்கள்" வசம் ஆட்சிக் கயிறு கிடைத்துவிட்டது. ஆட்சிக் கயிற்றை அவர்களிடமிருந்து வாங்கி மற்ற அறிவும், அனுபவமும், பொறுப்பும் உள்ளவர்களிடம் கொடுக்கவேண்டியது மக்கள் நலனில் கவலையுள்ளவர்கள் கடனாகும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது நம் கடமை.

**வெற்றி நமக்கே என்று கூறி**
**இம் மாநாட்டைத்**
**துவக்கிவைககிறேன்.**
**எல்லோர்க்கும் வணக்கம்.**

# திராவிடமுன்னேற்றக் கழகம்

## புதிய கிளைகள்

### கொழும்பு கிளை

கொழும்பு மருதானை திராவிட முன்னேற்றக் கழக திறப்பு விழா 3—9—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணியளவில் தோழர் பெ. பென்னையா அவர்கள் தலைமையில் ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு 119/43-ம் இலக்க கட்டிடத்தில், தோழர் சே. மு. சிவராமன் அவர்களின் திராவிடப் பண்பாடலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கழகத்லைத தோழர் சு. பெருமாள் அவர்கள் திறந்துவைத்து "ஏன் தி. மு. கழகம் நிறுவப்பட வேண்டும்" என்பதுபற்றி விரிவுரையாற்றினார்.

அடுத்தபடியாக, தோழர் அந்தோணி அவர்கள் பேசுகையில், இலங்கை, மலாயா, தென்னாப்பிரிக்கா முதலிய தேசங்களில் தமிழர்கள் படும்பாட்டை நன்ருக எடுத்துரைத்து, அதனால் நமக்கு ஒரு தனிநாடு வேண்டுமென்றும் அப்பொழுதுதான் தமிழர்களுடைய வாழ்வு வளம் பெறும் என்றும் எடுத்துரைத்தார்.

பிறகு, தோழர் பீ. டி. பாலையா அவர்கள் அறிஞர் அண்ணாவின் படத்தை திறந்துவைத்து அண்ணாவைப்பற்றி அரிய சொற்பொழிவொன்ருற்றியபின் தோழர்கள் வீ. ஆர். பாண்டியன் அவர்கள், ஆர். ஏ. மணி அவர்கள், சோமசுந்தரம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்பு, கூட்டத்தின் அங்கீகாரத்துடன் தோழர் எம். ஏ. முனிஸ்வாமி அவர்கள் பொதுச் செயலாளராகவும், வீ. ஆர். பாண்டியன் அவர்கள் துணைச்செயலாளராகவும், ஆர். ஏ. மணி அவர்கள் சட்டதிட்டக்குழு செயலாளராகவும், எம். சேது அவர்கள் நிதிக்குழு செயலாளராகவும், வீ. பி. பொன்னையர் அவர்கள் பிரசாரக்குழு செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### பூசாரி கவுண்டன்பட்டி

27-9-50-ல் திரு. மு. இராம இராசு அவர்கள் தலைமையில் இங்கு நிகழ்ந்த பொதுக் கூட்டமொன்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளையொன்று நிறுவி கீழ்க்கண்ட செயலுறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:—மு. இராம இராசு, துணைச் செயலாளர்:—மு. பொன்னம்பலம், பொருளாளர்:—நா. சி. இராமர், விளம்பர உறுப்பினர்:—அ. பொன்ராம்.

செயற்குழுவினர் 1. க. பொன்ராம், 2. சி. சீனிச்சாமி, 3, ச. சின்னபொம்மையா, 4. தா. பொம்மையா, 5 சோ. வீருமல்லையா, 6. பெ. ரா. சுருளி.

மாவட்டப் பிரதிநிதி:—நா. சி. இராமர். கடைசியில் காமையகவுண்டன்பட்டி, கே. ஏ. கலியமுகன் கழகத்தின் அமைப்பு முறை, கொள்கைகள் பற்றி, சொற்பொழிவாற்றினர்.

## "பகுத்தறிவு"

சலகண்டபுரம். செப்டம்பர் 30—பல சினிமாப் படங்களுக்கும், ரேடியோ நாடகங்களுக்கும் வசனம் எழுதிப் புகழ்பெற்ற இந்நகர் எழுத்தாளர் திரு. ப. கண்ணன் அவர்கள் "பகுத்தறிவு" என்ற பெயரால் ஒரு மாதப்பத்திரிகை நடத்த 28-9-50-ல் சேலம் அடிஷனல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் பதிவு செய்து கொண்டார்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பாதைகளிலும் செல்ல விரும்பாதவர்கள்.

இதோ இந்த மேடையிலே வீற்றிருப்பவர்கள் ஏறத்தாழ எல்லோருமே சிறைவாசம் புரிந்தவர்கள். இனியும் புரியத் தயாராக இருப்பவர்கள். எதற்காக? சட்டசபை நாற்காலிகளில் சென்றமர்ந்து சுகபோகம் அனுபவிப்பதற்கா? இல்லை! இன்பத் திராவிடம் பெற! எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கிச் செல்ல!

எங்களுடைய இலட்சியம் மந்திரி ஸ்தானமல்ல. அது சத்திரத்துச் சாப்பாடு. அந்தச் சாப்பாடுகூட, டில்லி சமையல்காரன் அனுப்பினால்தான் கிடைக்கும். அது அல்ல எங்கள் குறிக்கோள்! திராவிடத் தனிநாடு பெறுவதுதான் எங்கள் குறிக்கோள். அந்தக் குறிக்கோளை நிறைவேற்றவே, திராவிடர் பெரும்படை இதோ திரண்டிருக்கிறது — இந்தப் படையுடன் மோதிடவேண்டாம்—எச்சரிக்கிறேன்.

என்று பேசிவிட்டு, அறிஞர் அண்ணாதுரை, மேலும் பேசுகையில், திராவிட நாட்டுப் பிரிவினை—தென்னாட்டின் சிறப்பு—வடநாட்டின் ஏகாதிபத்தியப் போக்கு — உணவுப் பஞ்சம் ஆகிய பல்வேறு பிரச்சினைகளையும் விளக்கி அறவுரை ஆற்றினர்.

மாநாட்டு வரவேற்புத் தலைவர்

க. இராசசேகரன், B.A., B.L.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
கிடைத்தால் ஒழுங்கான விலைக்குக் கிடைக்காதும், எப்படி நூல் கிடைத்தாலும் ஜவுளியை விற்க முடியாமலும் திண்டாடுகிறார்கள். எனவே, சர்க்கார் கைத்தறி ஜவுளி ஏற்றுமதியை அனுமதித்தும், மில் நூல் ஏற்றுமதியை தடை செய்தும், சாய நூல் கோட்டாவை நிறுத்தி வெள்ளை நூல் (Gray yarn) வழங்கும்படியும் உத்தரவு செய்யவேண்டுமென சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

முன் : காஞ்சி மணிமொழியார்
வழி: கே. எஸ். இராஜமான்,
பஞ்சாட்சரம்

5. இராமநாதபுர வட்டத்தின் நடுவாகப் பல நகரங்களிலிருந்தும் இம்மாவட்டத்தின் தலைமையான அரசாங்க அலுவலகங்கள் பூராவும் மதுரையிலேயே இருப்பது பல அசௌகரியங்களுக்கும் பொருள் நஷ்டத்திற்கும் காரணமாக இருப்பதால் அவைகளை உடனடியாக மாற்றி இந்த மாவட்டத்திலேயுள்ள ஏதாவதொரு நகரில் நிறுவவேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

முன் :—எம். எஸ். இராமசாமி
வழி :—என். எஸ். இளங்கோ

6. இராமநாதபுர வட்டத்திற்கு நீர்ப்பாசன வசதியில்லாத காரணத்தால் போதுமான நிலங்களிலிருந்தும் சாகுபடி செய்ய முடியாத கேவலமான நிலை இருந்துவருகிறது. இக்குறைபோக்கி நீர்ப்பாசன வசதி, தங்குதடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென, இம்மாநாடு, அரசியலாளரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

முன் :—இராம அரங்கண்ணல்
பின் :—கோ. தண்டபாணி

7. எழுத்துரிமையைப் பறிக்கும் விதத்தில் அடக்குமுறைச் சட்டங்களைக் கையாண்டுவரும் அரசாங்கத்தின் போக்கைக் கண்டிப்பதுடன் தி. மு. கழகப் பொதுச்செயலாளரான அறிஞர் அண்ணா அவர்கள் "ஆரியமாயை" எழுதியதன் மூலமாக வகுப்புத் துவேஷத்தை மூட்டினார் என்று வழக்குத்தொடுத்து, ரூபாய் எழுநூறு அபராதம் விதிக்கும் அளவுக்கும், அதனை அன்னவரிடத்திலிருந்து வசூல் செய்யும் அளவுக்கும் எழுத்துரிமையைப்பறித்திருக்கும் அரசாங்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நிலைமையை அரசாங்கம் மேலும் நீடிக்க விரும்புமேயானால் எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றைக் காப்பாற்ற நேரடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டி நேரிடும் என்று அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கிறது.

முன் :—மா. இளஞ்செழியன்
பின் :—தில்லை வில்லாளன்
குடந்தை எஸ். கே. சாமி

8. பொதுவாக, காங்கிரசாட்சியில் தொழிலாளர் வாழ்வு, வேதனை மயமாகி வருவதோடு, அவர்களது அடிப்படை உரிமைகளும் பறிக்கப்படுவதை இம்மாநாடு கண்டிப்பதோடு, இந்திய பார்லிமெண்டில் கொண்டுவரப்படவிருக்கும் தொழில் மசோதா வாபஸ் வாங்கப்பட வேண்டும் என, இம்மாநாடு, வலியுறுத்துகிறது

முன் ,—T. K சீனிவாசன்
பின் :—பொன்மலை பராங்குசம்
M. S. சிவகாமி
அழகரடிமுத்து

9 A நாட்டிலே நடைபெற்று வரும் அறிவுப் பிரசாரத்தைத் தடை செய்யும் வகையில் பேச்சுரிமையைப் பறிக்கும் விதமாக அடிக்கடி பல ஊர்களில் 144 செக்ஷன்படி தடையுத்திரவு போடும் சர்க்காரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

B சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டிக்கும் விதமாகவும் பேச்சுரிமையை நிலை நாட்டும் விதமாகவும், மேற்படி தடை உத்திரவுகளை மீறும் திட்டத்தைத் தயாரித்துக் கொடுக்கும்படி, தி. மு. க பொதுச் செயலாளரை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன் :—என். எஸ். இளங்கோ
பின் :—கோவை இளஞ்சேரன்
சென்னை சி. வி. ராஜன்

10 நாட்டிலே கடந்த பல ஆண்டுகளாகப் பரவிவரும் பகுத்தறிவுப் பிரசாரத்தின் பலனாக, மக்கள், மதத்தின்பேரால் நடைபெறும் அநீதிகளை உணர்ந்து வருகிற நிலையில், ஓரளவுக்கேனும் பயன்படக்கூடிய விதமாக, சென்னை சர்க்கார் கொண்டுவரும் அறநிலைய மசோதாவை மேலும் தீவிரமானதாக்கி, வைதீகர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் மேற்படி மசோதாவை நிறைவேற்றும்படி இம்மாநாடு சர்க்காரை வலியுறுத்துக் கேட்டுக் கொள்கிறது.

முன் :K. K. நீலமேகம்
பின் :—சென்னை சேஷாசலம்


## இராதாமணாளன்
### புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| பெண் | 0 | 8 |
| பொற்சிலை | 1 | 0 |
| இன்பக் கனவு | 0 | 8 |

பகுத்தறிவுப் பாசறை, சென்னை

# 144ஐ மீறுங்கள்! பேச்சுரிமையை நிலைநாட்டுங்கள்!

★

## உரிமைப் போர்க் களத்திற்கு ஓடோடிவாருங்கள்!

★

## தந்துவிட்டேன் அனுமதி—திரள் திரளாக வாருங்கள் போர்முனைக்கு!

★

### சிவகங்கையில் அண்ணாதுரை வீரமுழக்கம்

"குன்னத்தூரிலே, திருவாரூரிலே, அதிராம் பட்டிணத்திலே, மற்றும் பல இடங்களிலே, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டங்களுக்கு 144 போடத் தொடங்கிவிட்டார்கள் ஆட்சியாளர்கள்—பேச்சுரிமை பறிபோகிறது—கூட்டம் போடுவதற்குக்கூட உரிமை மறுக்கப் படுகிறது—இதைப் பார்த்துக் கொண்டும் நாங்கள் வாளாவிடப்பதா—ஒரு வார்த்தை கூறுங்கள் அண்ணா—இந்த 144 உத்தரவுகளை நாங்கள் தூள் தூள் ஆக்குகிறோம் என்று தம்பிமார்கள் ஒவ்வொருவரும் இந்த மாநாட்டில் என்னைப் பார்த்துக் கேட்டார்கள்.

"பேச்சுரிமையை நிலை நாட்டுவதற்கான நேரடி நடவடிக்கை எடுக்கும்படி என்னைக் கேட்டுக் கொள்வதாக இந்த மாநாட்டில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"தம்பிமார்கள் கேட்ட அனுமதியை நான் மனப்பூர்வமாகத் தருகிறேன்—இனி, எந்த ஊரிலே நமக்கு 144 போட்டாலும், உடனே அதை மீறுங்கள்.

"ஆயிரமாயிரம் வீரத் திராவிடர்கள் வீறு கொண்டெழுந்து உரிமைப் போர்முரசுகளென வீற்றிருக்கும் இந்த மாநாட்டில், அனைவர் முன்னிலையில் வெளிப்படையாகக் கூறுகிறேன்—இனி எங்காவது 144 போட்டால், மீறட்டுமா அண்ணா என்று என்னைக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. மீறிவிட்டோம் அண்ணா என்று தந்திகள் என்னை நோக்கிப் பறந்துவர வேண்டும்.

"யாராவது சிலருக்கு மட்டும் 144 போடப்பட்டால், அந்தச் சிலர் மட்டுமல்ல, அந்தச் சிலருடன் செல்லும் மற்ற பலரும் 144 ஐ மீறி, கூட்டம் கூட்டமாகச் சிறைக்கோட்டம் சென்றாக வேண்டும்.

"எங்கெந்த ஊரிலே வசதி இருக்கிறதோ, அங்கெல்லாம், என்னுடைய அனுமதி பெற்று, தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்த என் தோழர்கள் முன்வரவேண்டும்.

"தோழர்கள், தனித் தனியாக அல்ல, குடும்பம் குடும்பமாக வரவேண்டும் சிறைச்சாலை நோக்கி.

"மணமான வாலிபர்கள் சிறைபுகுந்தால், மனைவிமார்கள் பட்டாளம் உடனே புறப்பட்டு சிறைக்கதவுகளைத் தட்டவேண்டும். தனயர்கள் சிறையில் என்றால், தந்தைமார்களும் சிறை நோக்கி வரவேண்டும்.

"ஆயிரமாயிரம் கூட்டங்களிலே நாம் பாடி இருக்கிறோம், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட, நினைக்கும் சிறைச்சாலை என்று! ஆனால் உண்மையில் சிறைச்சாலை பூஞ்சோலையாக இராது. சிறைச்சாலையாகத்தான் இருக்கும். ஆனால் நீங்கள் சிறைச்சாலையில் இருக்கும்போது, உங்கள் உள்ளமே ஒரு பூஞ்சோலையாகவும், உங்கள் சொற்களே குயிலோசையாகவும் இருக்கும்."

சிறையிலிருந்து மீண்ட சிங்க ஏறு அண்ணாதுரை, உயரமாக அமைக்கப்பட்டிருந்த மேடை மீது நின்றுகொண்டு, எதிரே, குமுறும் எரிமலைகளெனக் கொதிப்புடன் வீற்றிருந்த ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட வீரத்திராவிடர்களை நோக்கி, இதுபோல அறப்போர் முழக்கம் புரிந்தார் சென்ற கிழமை நடைபெற்ற சிவகெங்கை மாநாட்டில்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:—

நான் கருதினேன், நீங்களும் கருதினீர்கள், சர்க்காரும் கருதிற்று, நான் இந்தமாநாட்டிற்கு வரமாட்டேன் என்று. ஆனால், இதோ, மேடைமீது நான்! எதிரே நீங்கள்! ஒலி பெருக்கியில் என் சொற்பொழிவு! எப்படி நடைபெறுகிறது நடை

பெறாது என்று எல்லாராலும் எண்ணப்பட்ட இச் சம்பவம்? என்ன காரணம் இதற்கு? ஏன் நான் திடீரென்று விடுதலை செய்யப்பட்டுவிட்டேன்?

நாட்டிலே நான் உலவினால், என்னால் வகுப்புத் துவேஷம் பரவுவதாகக் கருதி, ஆட்சியாளர்கள் என்னைச் சிறையில் அடைத்தார்கள். ஆனால் சிறை என்றால் என்ன? மனித சஞ்சாரமே அற்ற பாலைவனமா அது? இல்லையே! சிறை ஏறத்தாழ ஒரு நகரம். திருச்சி சிறையின் ஜனத்தொகை, 3000. இவ்வளவு பேருக்கிடையே, என்னை விட்டால் நான் சும்மாவா இருப்பேன்? நானோ பேசிப் பேசிப் பழக்கப்பட்டவன்—எனவே என்னால் பேசாமல் இருக்க முடியாது. சிறைக் கைதிகளோ பிறர் பேசுவதைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள்—எனவே அவர்களால் என் பேச்சைக் கேட்காமல் இருக்கவும் முடியாது. நான் பேசுவேன்—அவர்கள் கேட்பார்கள். நான் பேசுவேன் என்றால் எதைப் பேசுவேன்? வெளியே எதைப் பேசியதற்காக உள்ளே தள்ளப்பட்டேனோ, அதைத்தானே உள்ளேயும் பேசுவேன்! இங்ஙனமாக வகுப்புத் துவேஷம் உள்ளேயும் பரவும்! எனவே தான்போலும் சர்க்கார், என்னை விடுதலை செய்து விட்டார்கள்.

வெளியே உள்ள உங்களிடம் பேசினாலாவது பரவாயில்லை. நீங்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் ஒழுங்கு முறையைக் கையாள்பவர்கள். எந்த நிலையிலும் அமைதியைக் கட்டிக்காப்பவர்கள். பலாத்காரப்பாதையைக் கண்ணெடுத்தும் பார்க்காதவர்கள் ஆனால் சிறைச்சாலைக்குள்ளே இருப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் அல்லவே! கையை ஒடித்தவர்கள், காலை முறித்தவர்கள், கொலை புரிந்தவர்கள், கன்னம் வைத்தவர்கள், சுவர் ஏறிக் குதித்தவர்கள், சீறிப் பாயும் சிறுத்தைக் குணத்தவர்கள், இப்படிப்பட்டவர்கள் அல்லவா உள்ளே இருப்பவர்கள்! அவர்களிடம் வகுப்புத் துவேஷம் பரவினால், அது மிகமிக ஆபத்தாக அல்லவா முடியும்? "முன்னே செய்த கொலை, கொள்ளை, திருட்டு, மோசடி சொந்தப் பகைவரை வீழ்த்துவதற்காகச் செய்தோம்! இனி நாட்டின் நன்மைக்காக நாலு கொலை செய்தால் தானென்ன" என்று அவர்கள் எண்ணி விட்டால் என் செய்வது—இவர்களுக்கிடையிலே அண்ணாதுரையை இருக்கவிடுகிறது டைனமைட் பக்கத்திலே நெருப்புக் குச்சியை வைப்பதுபோன்ற அபாயகரமான செயல் அல்லவா என்று எண்ணி இருப்பார் முதலமைச்சர் குமாரசாமியார். எனவே தான் என்னை விடுதலை செய்து விட்டார் என்றெண்ணுகிறேன். உள்ளே இருப்பவர்களிடம் "வகுப்புத் துவேஷம்" பரவுவதைவிட வெளியே இருப்பவர்களிடம் பரவுவது எவ்வளவோ மேல்—இதனால் ஏற்படக்கூடிய ஆபத்து மிகமிகக் குறைவு என்ற எண்ணம் முதலமைச்சருக்கு எப்படி ஏற்படாமல் இருக்கமுடியும்?

வெளியே நான் பேசுகிறபோது, என் பேச்சை எதிர்க்கவும் மறைக்கவும், திரித்துக் கூறவும் பழித்துப் பேசவும், கல்கி இருக்கிறது, ஆனந்த விகடன் இருக்கிறது, தினமணி இருக்கிறது, தினசரி இருக்கிறது, மித்திரன் இருக்கிறது, தேவி இருக்கிறது, இந்து இருக்கிறது, எக்ஸ்பிரஸ் இருக்கிறது. இவ்வளவு ஏடுகளும் என் பேச்சை எதிர்த்து சண்டமாருதப் பிரசாரம் செய்கிறபோதே, 6 மாதச் சிறைத் தண்டனை தருகிற அளவுக்கு என் பேச்சு பலமும் செல்வாக்கும் உடையதாக இருக்கிறது என்றால், இந்த ஏடுகள் இல்லாத சிறைச்சாலைக்குள் என் பேச்சு நிச்சயமாக அதிகப் பலன் அளித்துத்தானே தீரும்! இதை நினைக்கிறபோது ஆட்சியாளருக்கு, அச்சம், பிறக்காமலா இருக்கும்? இந்த நிலையிலே அவர்கள், என்னை விடுதலை செய்துவிட்டதிலே வியப்பென்ன இருக்கிறது?

நான் சிறைக்குள்ளே நுழைந்ததும், சூழ்ந்துகொண்டார்களே கைதிகள் என்னை! சில நிமிஷ நேரம் அவர்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள். பிறகு, அவர்கட்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை பாவம், என்னைப் பார்த்துக் கேட்டார்கள், பரமசாதுவாக இருக்கிறாயே நீ! நீ ஏனப்பா சிறைக்கு வந்தாய் என்று! என்ன பதில் சொல்வது நான்? என்னவென்று சொல்வது? நான் என்ன கன்னம் வைத்தேனா—கள்ளக் கையொப்பம் இட்டேனா—சுவர் ஏறிக் குதித்தேனா—திருட்டுத்தொழில் புரிந்தேனா? ஒரு தவறும் செய்யவில்லை! என்றாலும் சிறை புகுந்திருக்கிறேன்! கைதிகள் கேட்கிறார்கள் ஏன் வந்தாய் சிறைக்கு என்று? ஏன் சென்றேன் சிறைக்கு? என்னவென்று விடை கூறுவது? ஒரு கண நேரம், புதிதாக மணமான இளம்பெண் போல, தலையைக் குனிந்து கொண்டிருந்தேன். விட்டார்களா கைதிகள்? விடுவார்களா? சிறைக்கு வந்ததுதான் வந்தாயிற்றே— என்னப்பா வெட்கம் —வாய்திறந்து பேசேன் என்றார்கள். பிறகுதான் சொன்னேன், எனக்கும் ஆட்சியாளர்கட்கும் கொஞ்சம் சண்டை, அதன் காரணமாக அவர்கள்

என்னை சிறையில் அடைத்து விட்டார்கள் என்று.

உனக்கும் சர்க்காருக்கும் சண்டையா — அது என்ன சண்டை என்றார்கள். நான் ஒரு புத்தகம் எழுதினேன்— அது சர்க்காருக்குப் பிடிக்கவில்லையாம்! அதற்காகத்தான் எனக்குச் சிறைவாசம் என்று விளக்கமாகவே விடை கூறினேன்.

அவர்கள் கேட்டார்கள்: என்னதான் எழுதி இருக்கிறாய் அந்தப் புத்தகத்தில்?

நான் சொன்னேன்:—ஆரிய மாயையைப் பற்றி.

அப்படி என்றால் என்ன என்று கேட்டார்கள் அவர்கள். பிறகு, சாவதானமாக, பல கைதிகளை, அந்தச் சிறைக்குள்ளே இருந்த வேப்பமர நிழலிலே, உட்காரவைத்துக் கொண்டு, "ஆரியமாயை" நூலிலே, இன்னின்ன கருத்துக்களை விளக்கி இருக்கிறேன் என்று கூறினேன். பார்ப்பன இனம் போக போக்கியத்திலே புரள, பாடுபடும் திராவிட இனம் பசிக்கும் உணவின்றிப் பரிதவிக்கும் கதையைத்தான் அதில் எழுதி இருக்கிறேன் என்று கூறினேன். வேதம் என்றும், புராணம் என்றும், இதிகாசம் என்றும், மோட்ச நரகமென்றும் பொய்யுரை பல புகன்று, அந்த ஒரு கூட்டத்தில் உள்ள தந்திரசாலிகள், நாட்டு மக்களை நயவஞ்சகமாக ஏய்த்துப் பிழைக்கும் கொடுமையைத் தான் தீட்டி இருக்கிறேன் ஏட்டிலே என்று கூறினேன். இவ்வளவும் கேட்டுவிட்டு, அந்தக் கைதிகள், என்னைப் பார்த்து, "என்னப்பா அண்ணாதுரை! நீ சொல்வது ஒன்றும் எங்களுக்குப் புரியவில்லையே! நீயோ பார்ப்பன இனத்தவரிலே உள்ள சூது மதியினரின் சுரண்டல் போக்கைத்தான் எதிர்த்ததாகக் கூறுகிறாய்! உன்மீது வழக்குத் தொடுத்து உன்னைச் சிறைக்குள் தள்ளியிருப்பவர்களோ பார்ப்பனரல்ல — சர்க்கார்! சர்க்காரை எதிர்த்தோ நீ ஒரு குற்றமும் புரியக்காணோம்! அப்படி இருக்க சர்க்கார் ஏனப்பா உன் மீது நடவடிக்கை எடுத்தது? அது என்ன பார்ப்பனருக்கும் இந்த சர்க்காருக்கும் அவ்வளவு தொடர்பு" என்று கேட்டார்கள். கைதிகள் கேட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக் கொண்டே வந்த நான் இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லவில்லை! என்ன பதில் சொல்வது என்று இன்னமும் எனக்குத் தெரியவில்லை!!

"ஆரிய மாயை" ஏட்டிலே பார்ப்பனத் துவேஷம் இருக்கிறதாம்— அதற்காகத்தான் எனக்கு ஆறுமாதம் தண்டனையாம்—நான் பலமுறை தெரிவித்திருக்கிறேன் — இப்போதும் தெரிவிக்கிறேன்—நானே, என் கட்சித் தோழர்களோ, யாரும் பார்ப்பனத் துவேஷிகள் அல்ல! பார்ப்பனரைத் தூஷிப்பதோ தூற்றுவதோ தாக்குவதோ அல்ல எங்கள் வேலை! நாட்டிலே உள்ள எல்லா வகுப்பினர்களும் சம நீதியும் சம உரிமையும் பெற்று சமதர்ம வாழ்வு வாழ வேண்டும்—அதுதான் எங்கள் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகத் தான் நாங்கள் அரும்பாடுபட்டு வருகிறோம். அப்படியின்றி, வெறும் பார்ப்பனத் துவேஷம் தான் எங்கள் குறிக்கோள் என்றால், அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற, மாநாடா தேவை? பொதுக் கூட்டமா வேண்டும்? பிரசாரமா செய்ய வேண்டும்? பார்ப்பனத் துவேஷம்தான் எங்கள் இலட்சியமாக இருந்தால், உலக உத்தமர் காந்தியாரை கோட்சே என்னும் ஓர் பார்ப்பனன் சுட்டுக் கொன்றானே, அந்தப் பொன்னான நேரத்தைப் பயன்படுத்தி, பார்ப்பன இனத்தவர்மீது துவேஷ அனலை, ஆத்திரப் புயலை மூட்டியிருக்கவேண்டுமே! செய்தோமா? செய்வோமா? ஒரு பார்ப்பனனுக்காவது அந்த நேரத்தில் ஒரு குண்டூசி முனையளவு கெடுதியாவது செய்தோமா? நாங்கள் நினைத்திருந்தால், அந்த நேரத்தில் எவ்வளவு இரத்தக் களரியைக் காட்டியிருக்க முடியும்? பார்ப்பன இனத்தவரை எவ்வளவு நடுநடுங்க வைத்திருக்க முடியும்? அவர்கள் வீட்டை விட்டே வெளியே புறப்பட முடியாதபடி செய்திருக்க முடியுமே! காந்தியைக் கொன்றவன் ஒரு முஸ்லிம் என்று, முதலில், புறப்பட்ட ஒரு வதந்தியைக் காரணமாகக் கொண்டே, திருவண்ணாமலையில் முஸ்லிம்களை, காங்கிரஸ் இந்துக்கள் தாக்கிப் புடைத்தார்களே! தெரியாதா? ஒரு வதந்திக்கே இவ்வளவு ஆற்றல் உண்டு என்றால், காந்தியைக் கொன்றவன் பார்ப்பனன் என்பதை நாங்கள் எடுத்து விளக்கி மக்களைத் தூண்டி விட்டிருந்தால் எவ்வளவு ஆபத்தான சூழ்நிலை உருவாகியிருக்கும்?

> "உத்தமர் காந்தி கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவன் கோட்சே. கோட்சே ஒரு பார்ப்பனன். அதோ போகிறானே அவனும் ஒரு பார்ப்பனன்."

என்று ஒரு துண்டு நோட்டீஸ் அச்சடித்து நாடெங்கும் பரப்பியிருந்தாலே போதும், பார்ப்பனர் நிலை பரிதாபகரமானதாக ஆகிவிட்டிருக்குமே! ஆனால் நாங்கள் அந்த நேரத்தில் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டிருக்

கிறோம்! உத்தமர் காந்தியாரை ஒரு பார்ப்பனன்தான் கொன்றவன் என்பதைக் கேட்டு மக்கள் மன்றத்தில் இயற்கையாக ஏற்பட்ட கொதிப்பை, கொந்தளிப்பை, புயலை, வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்தவர்கள் நாங்கள் அல்லவா? இதைவிட அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் ஓர் அரசியல் கட்சி, நடந்து காட்டியிருப்பதாக உலக வரலாற்றிலேயே ஆதாரம் கிடையாதே! இப்படிப்பட்ட, எங்களைப் பார்த்து, வகுப்புத் துவேஷிகள் என்றுகூறுகிறீயே, சர்க்காரே, தகுமா?

காங்கிரஸ் கட்சி அஹிம்சை அஹிம்சை என்று வாய் ஓயாமல் கூவிற்று. ஆனால் காங்கிரஸ் கட்சி தொடுத்த ஒவ்வோர் அறப்போரும் மறப்போராகத்தான் முடிந்தது—பலாத்கார வெறியாட்டத்தில்தான் முடிந்தது. ஆனால் நாம், திராவிட இயக்கத்தவர்கள், பார்ப்பனீயத்தின் கொடுமையை விளக்கியிருக்கிறோமே தவிர, பார்ப்பனருக்கு இன்ன பலாத்காரம் புரிந்திருக்கிறோம் என்று யாராவது கூறமுடியுமா? ஆனாலும் ஆட்சியாளர்கள் நம்மைப் பார்த்து வகுப்புத் துவேஷிகள் என்று கூறுகிறார்கள் — அடுக்குமா இது?

வாதத்திற்காக — உண்மையாக அல்ல — வாதத்திற்காக, "ஆரிய மாயை" ஏட்டிலே வகுப்புத் துவேஷம் இருப்பதாகவே வைத்துக்கொளவோம். இருந்தால் என்ன செய்யவேண்டும் சர்க்கார்? புத்தகம் வெளியானவுடனே அல்லவா அதைத் தடுத்து, அதில் உள்ள "துவேஷம்" நாட்டிலே பரவாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்? அப்படிச் செய்தார்களா ஆட்சியாளர்கள்? இல்லை! 'ஆரிய மாயை' 4 பதிப்புகள் வெளியானபிறகு, 12000 பிரதிகள் நாட்டில் நடமாடி தம் கருத்துக்களை நாடெங்கும் தூவிய பிறகு, பல்லாயிரக்கணக்கான மக்கள் 'ஆரிய மாயை'யைப் படித்துப் பார்த்து, அதன் கருத்துக்களைத் தங்கள் நரம்போடு நரம்பாக முறுக்கேற்றிக் கொண்ட பிறகு, 'ஆரிய மாயை'யிலே உள்ள வாசகங்கள் பலருடைய உள்ளத்திலேயும் தங்கிவிட்ட பிறகு, ஆறு ஏழு மந்திரிகள் வீட்டிலேயே "ஆரிய மாயை" உலவத் தொடங்கிய பிறகு, இவ்வளவு 'துவேஷ'மும் பரவிய பின்னர்தான் 'ஆரிய மாயை'யைத் தடுக்கவேண்டும் என்ற புத்தி ஆட்சியாளருக்கு உதயமாகிறது என்றால், அவர்களுடைய அறிவுக் கூர்மையை என்னவென்று கூறுவது? குதிரை தப்பி ஓடிவிட்டபிறகு கொட்டில் கதவை இழுத்துப் பூட்டுவதைப்போன்ற விபரீதச் செயல் அல்லவா இது?

இப்படிப்பட்ட செயல் புரிபவர்களை, தூய தமிழிலே பேசுபவர்கள் முட்டாள்கள் என்று கூறுவார்கள். நாகரிகத் தமிழிலே பேசுபவர்கள் புத்தியில்லாதவர்கள் என்று கூறுவார்கள் அப்படியெல்லாம் கடுமையாகக்கூற என் மனம் ஒப்பவில்லை நான் அவர்களை புத்தியை மறந்தவர்கள் என்றுமட்டும் கூறுகிறேன். புத்தியே இல்லாதவர்கள் அல்ல அவர்கள். புத்தியை மறந்திருக்கிறார்கள். அவ்வளவுதான்!

"துவேஷம்" பரவுகிறபோதே தடுப்பது புத்திசாலித்தனமா அல்லது "துவேஷம்" நாடெங்கும் பரவியான பிறகு, அதைத் தடுக்க வருவது புத்திசாலித்தனமா? திருடனை, அவன் திருடிய நகையுடன் சுவர் ஏறிக்குதித்தது வீதியில் நுழையும்போதே பிடிப்பது அறிவுடைமையா அல்லது, அவன், திருடிய நகையை மார்வாடியிடம் விற்றுவிட்டு, 250 ரூபா பணம் பெற்று, அந்தப் பணம் முழுவதையும் செலவழித்து, கையில் சல்லிக்காசும் மிச்சமின்றி வீதிவழியே செல்லும்போது இவனாக இருக்கக்கூடும் என்ற ஐயஉணர்வுடன் பிடிப்பது அறிவுடைமையா? ஆட்சியாளர்கள் இந்த இரு வழிகளில், இரண்டாவது வழியைத்தான் பின்பற்றியிருக்கிறார்கள். இவர்கள் ஆட்சியின் மாட்சி இது!

இந்த 'ஆரிய மாயை' வழக்கு ஆட்சியாளர்களால் நடத்தப்பட்ட முறை இருக்கிறதே, அதை எண்ணினாலே மிகவும் வேடிக்கையாக இருக்கும்! 1949 செப்டம்பர் 17 அன்று நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா நடைபெற்றதல்லவா சென்னையில்! அதற்கு முந்திய நாள், என்னை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தனியே அழைத்து, நீங்கள் இன்னின்ன ஏடுகளை எழுதியிருப்பது உண்மையா என்று கேட்டார். ஆமாம் என்றேன். அப்போது அவர் கேட்ட ஏடுகளிலே ஒன்றுதான் "ஆரியமாயை". இந்த வழக்கிலே எனக்குத் தண்டனை தரப்

---

## வாசகர்கட்கு

**போர்வாள் ஆண்டு மலர்** முற்றும் செலவாகி விட்டன. ஆகவே, மலருக்காக யாரும் இனி பணம் அனுப்பாமலிருக்க வேண்டுகிறோம். இதுவரை அனுப்பியுள்ளவர்கட்கும் மலர் அனுப்ப இயலாமைக்கு வருந்துகிறோம்.

தங்கட்கு மலர் கிடைக்கவில்லை எனப் பல சந்தாதாரர்கள் அறிவித்துள்ளார்கள். எல்லா சந்தாதார்கட்கும் மலர் அனுப்பப்பட்டுள்ளது. யாருக்கேனும் கிடைக்காமலிருந்தால் அது தபாலாபீசில் நடந்த தவருகவே இருக்கும்.

**பொறுப்பாளர்.**

பட்ட தேதி — 1950 செப்டம்பர் 18

வழக்கு ஆரம்பமான நாள் 1949 செப்டம்பர் 16.

வழக்கு முடிந்த நாள் 1950 செப்டம்பர் 18.

எவ்வளவு வேகமாகக் காரிய மாற்றியிருக்கிறார்கள் சர்க்கார்!

வழக்கு விசாரணை 7-ம் தேதி என்று இருக்கும். அன்று நீதிமன்றம் போவேன். போனதும் விசாரணை 17-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டு விட்டது என்பார் நீதிபதி. 17-ம் தேதி நீதிமன்றம் சென்றதும், வழக்கு 24-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்படும். 24 பிறகு 29 ஆகும். 29 அடுத்த மாதம் 7 ஆகும். இப்படி நான்கு மாதகாலம் வழக்கு விசாரிக்கப்படாமலே ஒத்திப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. காரணம் என்ன தெரியுமா? வழக்கிலே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், சாட்சி சொல்லவேண்டும். அவருக்கு சம்மன் போய்ச் சேர்வதற்குத்தான் இப்படி நான்கு மாதகாலம் பிடித்திருக்கிறது. வேடிக்கை என்ன தெரியுமோ, வழக்கு நடந்த இடம் திருச்சி. அந்த இன்ஸ்பெக்டர் இருந்த இடமும் திருச்சி. திருச்சியிலே பிறப்பிக்கப்பட்ட சம்மன் திருச்சியிலேயே உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டருக்குப் போய்ச் சேருவதற்குத்தான் 4 மாதகாலம் பிடித்திருக்கிறது. அவ்வளவு சுறுசுறுப்பு இந்த சர்க்கார்!

முதல் 4 மாத காலத்திற்குப் பிறகு, நீதிபதி, என்ன அண்ணாதுரை, வழக்கை எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்பார். நான் இன்னின்ன தேதியில் மாநாடு, இன்னின்ன தேதியில் பொதுக்கூட்டம், இன்னின்ன தேதியில் இன்னின்ன கட்சிக்கூட்டம், எல்லாம் போக, இன்னின்ன தேதியில் வழக்கை வைத்துக் கொள்ளலாம் என்பேன். அப்படியே வழக்கு நடந்துவந்தது. எனக்கு அவ்வளவு பெருமை தந்திருக்கிறார் நீதிபதி என்று காட்டுவதற்காக அல்ல நான் இதைக் குறிப்பிடுவது. சர்க்கார் தொடுத்த வழக்கிலே ஒரு நீதிபதி எவ்வளவு குறைந்த அக்கறை காட்டுகிறார் என்பதை விளக்கத்தான் குறிப்பிடுகிறேன்.

நீதிபதி அளித்த தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறார், (Arya Mayai seems to create class hatred—at first sight) முதலெடுப்பிலே பார்க்கும்போது, ஆரிய மாயை வகுப்புத் துவேஷத்தை ஊட்டுவதாகக் காணப்படுகிறது என்று! இந்த வாசகத்திலிருந்தே, அந்தப் புத்தகத்தைக் கூர்ந்து கவனித்தால், அதில் வகுப்புத் துவேஷம் இல்லை என்பது தெளிவாகத் தெரியும் என்பது தெரிகிறதே—பிறகு ஏன் தண்டனை?

மந்திரி மாதவமேனன் பேசியிருக்கிறார், சிறையிலிருந்து அண்ணாதுரையை விட்டுவிட்டதாலேயே, அவர் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை வசூலிக்கமாட்டோம் என்று யாரும் எண்ணிவிடத் தேவையில்லை என்று! சர்க்காருக்கு அவ்வளவு பணப்பசி இருந்தால், மந்திரி மாதவமேனனார் உண்டிப்பெட்டியுடன்வரட்டுமே நம் மாநாடு நோக்கி! பணம் வசூலித்துத்தருகிறேன். தேவை பணம்தான் என்று சொன்னால் அதை வெளிப்படையாகச் சொல்லி கேட்டு வாங்கிக் கொள்ளட்டுமே! இதற்கு ஒரு வழக்கு—விசாரணை—தண்டனை என்கிற நாடகம் எதற்கு?

நான் ஆட்சியாளர்களுக்குத் தெளிவாகவும் வெளிப்படையாகவுமே சொல்லிவிட ஆசைப்படுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்திலே நானும், திராவிடர் கழகத்திலே பெரியாரும் தான் கடைசி மிதவாதிகள். இரண்டு கட்சிகளும் தீவிரக் கட்சிகள். இரண்டுகட்சிகளிலும்நாங்கள் இரண்டே பேர்தாம் மிதவாதிகள். மற்ற தோழர்கள் அனைவரும் துள்ளிப்பாயும் இளங்காளைகள். அஞ்சா நெஞ்சு படைத்த அடலேறுகள். எத்தகைய ஆபத்து கண்டும் கலங்காத அதிதீவிரவாதிகள். அவர்களுடைய ஆவேசத்தை, ஆத்திரத்தை, கொந்தளிப்பை, உணர்ச்சிப் புயலை அடக்கி வைத்திருக்கும் இரண்டு(Brakes)‘பிரேக்’குகள் நானும் பெரியாரும். இந்த அணைகள் இரண்டையும் இப்போது உடைத்து விட்டால், பிறகு, எங்களால் தடுத்து நிறுத்தப்படும் வெள்ளம், கரைபுரண்டு ஓடிவரும். அப்போது அதனைத் தடுத்து நிறுத்தும் சக்தி யாருக்குமே இருக்கமுடியாது. எனவேதான் நான் எச்சரிக்கிறேன், ஆட்சியாளர்கள் வீணாக எங்கள் இருவருடன் மோதிக் கொள்ள வேண்டாம். மோதுவதால் நஷ்டம் எங்களுக்கல்ல— சர்க்காருக்குத்தான் — சர்க்கார் இதை உணரட்டும்— உணர்ந்து நல்வழி நடக்கட்டும்.

நாளைபதினம் தேர்தல்—அது பற்றிக் கவலையில்லை—ஆனாலும் கூட்டம் போடுகிறோம் — இப்படி ஒரு கட்சி வேறு எங்குமே கிடையாது.

பொதுவாக, உலகத்திலே, கட்சிகள், ஒன்று, தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்று பாடுபடும். இல்லையேல் பலாத்காரத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும். நாங்களோ

[13-ம் பக்கம் பார்க்க]

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

புடன் வேண்டுகோள் விடுத்து தன் தலைமையுரையை முடித்தார் தோழர் நடராசன்.

இரவு உணவுக்கான இடைவேளைக்குப் பிறகு, மாநாட்டுப பந்தலில், **இசைவேந்தர் தோழர் எம். எம். மாரியப்பா**, தம்முடைய இசைக் குழுவினருடன் வந்திருந்து, சுமார் நான்கு மணி நேரம், கூடியிருந்த மக்கள் உள்ளத்தில் எல்லாம் இசை வெள்ளத்தைப் பாய்ச்சினார். முற்றிலும் தமிழிலேயே இசையை முழக்கினால் கச்சேரி களைகட்டி வருமா என்று இன்னமும் சில ஆரியக் குஞ்சுகள் வறட்டு வாதம் புரிகின்றனரே, "அதுகள்," அன்று சிவகங்கை வந்திருந்தால், மாரியப்பா நான்கு மணி நேரமும் தமிழிசையையே முழங்கி, மக்கள் அனைவரையும் இசைவடிவினராக ஆக்கிவிட்ட அந்த அற்புதக் காட்சியைக் கண்டு நிச்சயம் வாயடைத்துப் போயிருப்பர். மாரியப்பாவின் இசை, காற்றிலே கலந்துவரும் கீதமாக வந்து, மக்கள் உள்ளத்திலே இன்பநாதத்தை எழுப்பியபோது, வெண்ணிலாவும் வானும்போல, வீரனும் கூர்வாளும் போல, சங்கத் தமிழும் அதன் சுவையும் போல, செந்தமிழ்த் தோழர்களும் தமிழ் இசையும் ஒன்றாகிவிட்டனர்.

மறு நாள் காலை மீண்டும் மாநாடு கூடியதும், தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. ஏ. மதியழகன். அதிராம் பட்டினம் இளங்கோ, ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகியோர், தெளிவாகவும் விளக்கமாகவும், முன்னேற்றக் கழகக் கோட்பாடுகளை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தினர்.

இடை வேளைக்குப் பிறகு, பிற்பகல் 4 மணிக்கு மாநாடு கூடி, பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது. [அவை, வேறு பக்கத்தில் தரப்பட்டுள்ளன.] அந்தத் தீர்மானங்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் தோழர்கள் ஈரோடு அப்பாவு, இராஜமாணிக்கம், ஏ. கே. வேலன், ஞானமுத்து, 'ஆரம்பக் கல்வி' ஆசிரியர் வீரராகவன், 'போர்வாள்' ஆசிரியர்கள் காஞ்சி மணிமொழியார்— மா. இளஞ்செழியன், கே. எஸ். இராஜமான், மதுராந்தகம் பஞ்சாட்சரம், என். எஸ். இளங்கோ, எம். எஸ். இராமசாமி, கோ. தண்டபாணி, இராம. அரங்கண்ணல், குடந்தை சாமி, தில்லை வில்லாளன், டி. கே. சீனிவாசன், திருச்சி பராங்குசம், சென்னை சி. வி. ராஜன், சேஷாசலம், கோவை இளஞ்சேரன், குடந்தை நீலமேகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், **தோழர் அண்ணாதுரை**, நகைச்சுவையும் வீரச்சுவையும் தமிழ்ச்சுவையும் ததும்பியதோர் சிறந்த சொற்பொழிவாற்றி, அரிய பல கருத்துக்களை மக்கள் உள்ளத்திற்கு விருந்தாக அளித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு, மாநாடு சுமார் எட்டுமணி அளவில் முடிந்தது.

கவிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, அறிஞர் அண்ணாதுரை. காஞ்சி கல்யாணசுந்தரம், தில்லை வில்லாளன், ஈழத்தடிகள், ஈ. வெ. கி. சம்பத் மற்றும் பலர் நடிகக் குழுவாக அமைந்து, இரவு 10 மணிக்குத் தொடங்கி, "**சந்திரமோகன்**" நாடகத்தைச் சிறப்புற நடத்திக் காட்டினர்.

இராமநாதபுரம் மாவட்ட முதலாவது திராவிட முன்னேற்றக் கழக மாநாடாகிய சிவகங்கை மாநாடு எல்லா வகைகளிலும் சிறப்பாக அமைந்திருந்தது. பிரதிநிதிகள் தங்க இடவசதி, உணவு வசதி, குளித்தல் முதலாகிய எல்லா வசதிகளும், மாநாட்டு வரவேற்புக் குழுவினரால், பாராட்டத்தக்க முறையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

மாநாட்டின் வெற்றிக்காக சென்ற ஒரு [illegible] ஓயாது உழைத்து, உழைப்பின் பயனை, செப்டம்பர் [illegible] அக்டோபர்! ஆகிய நாட்களில் [illegible] மனமெல்லாம் பூரித்துப்போன வரவேற்புக் குழுத் தலைவர் **க. இராசசேகரன்**, பொருளாளர் **வி. இராமலிங்கம்**, செயலாளர் காரைக்குடி **இராம. சுப்பையா**, துணைச் செயலாளர் **சிவ. சண்முகசுந்தரன்**, விளம்பர உறுப்பினர்கள் **க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ. பி. எல்; கோ. தண்டபாணி** ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

குறிப்பாக, அழகிய தோற்றமும், புன்முறுவல் பூத்த முகமும், குழந்தை உள்ளமும், இன்னிசைச் சொற்களும் படைத்த சிங்க இளைஞர்—செந்தமிழர் தோழர்— **காரைக்குடி இராம. சுப்பையா** அவர்களின் தொண்டு, திராவிட இயக்கத் தோழர்களின் இதயத்திலே இடம் பெறும் சிறப்பு மிகுந்தது ஆகும். மாநாட்டின் வெற்றியை அவருடைய வெற்றி என்றே கூறிவிடலாம்—அந்த அளவுக்கு, மாநாட்டின் வெற்றிக்காக, இராமநாதபுரம் மாவட்டத்தின் திக்கெட்டும் சுழன்று சுழன்று அரும்பணி ஆற்றியிருக்கிறார் தோழர் இராம சுப்பையா.

சிவகங்கை, திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலே சிறந்ததோர் இடம் பெற்று விட்டது—ஆம், அப்படித்தான் வாய்விட்டுக் கூறினர், மாநாட்டிலிருந்து தம்தம் ஊருக்குத் திரும்பிச் சென்ற ஆயிரமாயிரம் திராவிடர் அனைவரும்.

**வாழ்க சிவகங்கை!**

# அறிஞர் அண்ணா வரவேற்புக் கூட்டம்

7—10—50 சனி மாலை 6 மணி

சென்னை பெரம்பூர் கான்ரன்ஸ் மித்நகர் மைதானம்

தலைவர்: தோழர் பாலசுந்தரம்

பேச்சாளர்: டி. கே. சீனிவாசன்

**அண்ணா** அவர்களும் கலந்து கொள்வார்.

**வி. கே. வி. சாமி**
வரவேற்பாளர் ஒட்டேரி, பட்டாளம், தி. மு. க. கிளைகள்.

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)